www.padippakam.com

# தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!

## சோஷலிச வேலைத்திட்டத்திற்காக போராடு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
அரசியல் குழுவின் அறிக்கை
1988 ஜூலை 22

தொழிலாளர் பாதை வெளியீடு

விலை DM 3,-

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!

## சோஷலிச வேலைத்திட்டத்திற்காக போராடு!

### புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை 1988 ஜூலை 22

**மு**தலாளித்துவ யூ என்.பீ அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான பிரசாரத்திற்கும் போராட்டத்திற்கும் முன்வரும் தோட்டத் தொழிலாளர்களே! ஏகாதிபத்திய-முதலாளித்துவ சுரண்டல், அடக்குமுறையின் நுகத்தடியினை நிரந்தரமபக தூக்கி வீசும் பொருட்டு சோஷலிசப் புரட்சிக்கான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அணி திரண்டு போராடுங்கள்!

நூற்றாண்டு காலங்களாக பிரித்தானிய காலனித்துவ கொள்ளைக்காரர்களதும் அவர்களது வழித் தோன்றல்களான இலங்கை முதலாளித்துவ கொள்ளைக்காரரதும் ஆட்சியில் கொடிய சுரண்டலுக்கு ஆளான தோட்டத் தொழிலாளரில் இலட்சக் கணக்கானோரை 1964 சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் அநியாயமாக நாடு கடத்தி தென்னிந்திய வீதிகளில் அலையவைக்க இலங்கை-இந்திய ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்தனர். தமது வர்க்க சகோதரர்களை பலி கொண்ட அதே துன்பகரமான தலைவிதிக்கு தம்மையும் பலியிட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் நாடுகடத்த கட்டளையிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் சோஷலிச புரட்சியின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணி திரண்டு போராடுவதை தவிர வேறு மார்க்கமே கிடையாது.

இக் கொடிய தாக்குதலுக்கெதிராக தோட்ட தொழிலாளருடன் வர்க்க தோழமையினடிப்படையில் இணைந்து போராடுமாறு இலங்கையின் சகல தொழிலாளரையும் அவர்களது சகல வர்க்க அமைப்புகளையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இக் கொடிய தாக்குதலை தோற்கடிப்பது, இலங்கையின் தொழிலாள வர்க்கத்திற்கு தன் சுய எதிர்கால தலைவிதியை நிர்ணயித்து கொள்ளல் தொடர்பான ஜீவ மரண போராட்டமொன்றாகும்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு இலட்சம் வரையிலான தோட்டத் தொழிலாளரின் தொழில்களை பிடுங்கி அவர்களை தென்னிந்தியாவுக்கு நாடு கடத்தும் ஆணை விதிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தனியார் துறையின், தொழில் அழிவின் அதிக சுரண்டலின் மிரட்டலை எதிர் கொண்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர் மீது விதிக்கப்பட்ட அரச வேட்டையினால் தற்போது அவர்களது வர்க்க தோழர் 160 பேர் விளக்கமறியல் சிறையில் வாடுகின்றனர். கடந்த ஜனவரி 31ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் மூலம் மீண்டும் ஒருமுறை முன் சமர்ப்பிக்கப்பட்ட சம்பளக்கோரிக்கை யூ. என்.பீ. அரசாங்கத்தினால் குப்பைக் கூடைக்குள் தள்ளப்பட்டுள்ளது. தோட்ட தொழிலாளரது உரிமைகளுக்கு இங்ஙனம் கொடிய தாக்குதல் வழங்குவதற்காக, யூ என் பி அரசாங்கமும் ஏனைய முதலாளித்துவ கட்சிகளும் தமிழ் விரோத இனவாதத்தை கிளப்பும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டுள்ளன

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இருநாட்டு ஆளும் வர்க்கமும் இணைந்து வெளியிட்ட ஆணையை ஏற்க தாம் தயாரில்லை என தோட்டத் தொழிலாளர் அவர்களுடைய போராட்டம், பிரசாரங்களூடாக சவாலிட்டு வெளிப்படுத்தியுள்ளனர். தமது வர்க்க அமைப்புகளினால் போராட்டத்திலிறக்கப்பட்ட சகலவரையும இறுதிவரை போராடும் மன உறுதியையும் நடைமுறை தேவையும் அவசியமும் அபிவிருத்தியுற்றுவிட்டதை மதட்டத் தெளிவாக விளக்கியுள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கருங்காலித்தனமான ஆணையை புறக்கணித்த இரண்டு லட்சம் வரையிலான தொழிலாளர் ஜனவரி 31ம் திகதி கூட்டப்பட்ட அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கு பற்ற குதித்தன .

தோட்டத் தொழிலாளரது இத் தயாரிப்பை இழுத்தடிக்கவும், அந்நியப் படுத்தவும் காட்டிக் கொடுக்கவும் உள்ளூர செயற்படும் விலங்குகளாக சமசமாஜ-கம்யூனிச- இ.தொ.கா தலைமைகள் முழு மூச்சாக செயற்பட்டனர். தொழிலாளரது போராட்டம் எழுந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய படை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் யூ.என்.பீ. அரசாங்கத்திற்கு எதிராகவும் இராணுவ-பொலிஸ் அடக்குமுறைக்கெதிராகவும் போராடுவது வரை இழுபடும் வர்க்க போராட்டமாக பரிணாமமாவதை நன்றிந்த இத்தலைமைகள் அதனை தடுத்துவிட வேண்டுமென்றே தலையிட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர் எதிர்கொண்டுள்ள கொடிய இனவாத தாக்குதலானது முழுத் தொழிலாள வர்க்கத்திற்கு மெதிராக தொடுக்கப்

www.padippakam.com

பட்டுள்ள தாக்குதலின் ஓர் பிரிவேயாகும். இலங்கையில் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பேணுமுகமாக ஏகாதிபத்திய வாதிகளது ஆலோசனைப்படி 1987 யூலை 29ம் திகதி கைச்சாத்திட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் தாயகத்தின் விடுதலைப் போராட்டத்தை இரத்தக் களரிக்குள் மூழ்கடிக்க இந்திய படைகளது ஆதரவை பெற்றுள்ள யூ என். பி: அரசாங்கம், அதே சமயத்தில் ஏனைய தோட்ட தொழிலாளரை இலட்சக் கணக்கில் நாடு கடத்தவும் முழுத் தொழிலாள வர்க்கத்திற்கும், வறிய



இ. தொ. க: ஊர்வலம்

வர்களுக்கும் எதிராக அரச படைகளை கட்டவிழ்க்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. முதலாளித்துவ வர்க்க எதிர்க்கெதிராக பொதுப் போராட்டத்தை தொடுப்பதில் முன்நிற்பதாலேயே பாட்டாளி வர்க்கத்தினால் எதிர்த்தாக்குதலை தொடுக்க முடியும்.

## 2. தொழிலாள வர்க்க நிலைமையின் பின்னணி

தொழிலாளவர்க்கம் எதிர்கொண்டுள்ள கொடிய நிலைமையின் பின்னணியாயுள்ளது, ஆழமடைந்துள்ள உலக முதலாளித்துவ நெருக்கடியின் பாகமாக இலங்கையின் முதலாளித்துவ அமைப்பு பெரும் உக்கிர நெருக்கடிக்கு கீழ்ப்பட்டுள்ளமை ஆகும். இலங்கையின் முதலாளித்துவ பொருளாதாரம், பிரதானமாக உலக வர்த்தக சந்தைக்கு உற்பத்தி செய்யும் தேயிலை, இறப்பர், தென்னை தோட்ட பொருளாதாரமொன்றாகும். உலக முதலாளித்துவ நெருக்கடியானது, இலங்கையின் முதலாளித்துவ அமைப்பின் மீதும் தோட்டப் புறத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாகும்.

இத்தகைய நெருக்கடியின் மத்தியில் உலக ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இலங்கை, இந்தியா போன்ற அரைக் காலனித்துவ நாடுகளது முதலாளித்துவ ஆட்சியாளரை தொழிலாளர், வறியவர்களுக்கெதிராக முன்னெருபோதுமில்லாதவாறு திரள செய்துள்ளனர். இரண்டாவது உலக யுத்த முடிவில் உலக முதலாளித்துவத்தை பேண அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது தலையீட்டுடன் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளருடன் ஏற்படுத்திய தொடர்பினைபோல அரைக் காலனித்துவ ஆட்சியாளருடன் ஏற்படுத்திய தொடர்புகளும் வேறுபாட்டை வேண்டி நிற்கின்றன. கடன், வர்த்தக சந்தை பங்குகளை பெற செழுமைக்காலத்தில் நடத்திய ''நிவாரணமளிக்கும்'' வேலைத்திட்டங்களை நெருக்கடி உக்கிரமாகும் வேளையில் ஏகாதிபத்திய ஆட்சியாளர் கை விட்டனர். 1988 யூன் மாதத்தில் நிகழ்ந்த முக்கிய 7 ஏகாதிபத்திய நாடுகளின் உச்சி மகாநாட்டில் வறிய நாடுகளைப் பற்றி முதலைக்கண்ணீர் வடித்த அரச தலைவர்கள் எந்த விதத்திலும் தாக்கு பிடிக்க முடியாதுள்ளதாக கணிப்பிடப்பட்ட 17 நாடுகளுக்கு ''கடன் வழங்குவது'' பற்றி இங்ஙனம் குறிப்பிட்டுள்ளன:

''கடனை மீளளிப்பது ஏற்றுமதிகளின் 30% வீதத்தினை தாண்டக் கூடாததோடு அந்த நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் வயிற்றை கட்டும் கொள்கைகளை செயற்படுத்தவும் வேண்டும்...''

யுத்தத்தின் பின் உலக முதலாளித்துவத்தை பேண சுமத்தப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இற்றுப்போன தன்மை மிகப் பாரியதாகும். அமெரிக்கா தற்சமயம் உலகின் பெரிய கடனாளி நாடொன்றாக விளங்குகிறது. 1940ம் ஆண்டுகளினிறுதியில் நூற்றுக்கு 50% உலக சந்தையினை பிடித்திருந்த அமெரிக்கா இன்று 25% வரை நிலைகுலைந்து போன பங்கையே கொண்டுள்ளது. 1945ல் அமெரிக்காவின் டெற்றொயிட் நகர் உலக வாகன உற்பத்தியில் 80% உற்பத்தி செய்தது. 1965ல் அது நூற்றுக்கு 65% ஆகவும் வீழ்ச்சியுற்று 1980ல் நூற்றுக்கு 20% வரை பொறிந்துள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலக முதலாளித்துவத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கு ஜேர்மனி, யப்பான் போன்ற தமது போட்டிக்கார முதலாளித்துவ ஆட்சியாளருக்கு பக்கபலமளித்து ஊக்குவித்தனர். இன்று உலக வர்த்தக சந்தையில் இல்லாதொழிந்துவிட்ட தமது ஆதிக்கத்தை மீண்டும் கைப்பற்றி கொள்ளுவதற்காக இந்த போட்டியாளருடன் விசேடமாக — யப்பானுடன் பாரிய மோதல்களை ஏற்படுத்தும் வெட்டு குத்துகளுக்கு செல்லும் நிலை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டுள்ளது. யுத்த முடிவில் ஏகாதி



படிப்பகம்

www.padippakam.com

பத்திய நாடுகளிடையேயான போட்டா, போட்டிகளை நிர்வகிக்க பிரெட்டன் வூட் ஒப்பந்தம், சர்வதேச நாணய நிதி, வர்த்தக வரி தொடர்பான பொது இணைப்பு (கேட்) போன்ற நிறுவனங்கள் நிறுவப்பட்டாலும் இன்று அந் நிறுவனங்களை நிர்வகிக்க முடியாதளவிற்கு மோதல்கள் தீவிரப்படும் காலம் ஆரம்பமாகியுள்ளது. உலக ஏகாதிபத்தியத்தின் ஆழமான நெருக்கடி தொழில், சம்பள, வாழ்க்கைத்தர, சமூக சேவை தொழிற்சங்க அரசியல் உரிமை அழிவுகளை ஏற்படுத்தும் கொடிய தாக்குதல் தொடர்களை பல்வேறு மட்டத்தில் சகல நாடுகளிலும் கட்டவிழ்த்துள்ளவிதத்தை இன்று பாட்டாளி வர்க்கம் கண்ணுரக் காணுகின்றது.

இலாப வேட்கையில் ஓடும் உலக முதலாளித்துவ அமைப்பானது இங்ஙனம் தன்னுள் கருக்கொண்ட தீர்க்கமுடியாத பரஸ்பர முரண்பாட்டை தீவிரப்படுத்தி மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக விளங்குகிறது. அதாவது, உற்பத்திக்காக ஒரு நாட்டில் மட்டுமல்ல பல நாடுகளிலும் தொழிலாளரது ஒருங்குபட்ட முயற்சிகள் தேவைப்படுமளவிற்கு உற்பத்தி சமூகமயமாகியுள்ள வேளையிலும் இலாபத்தினடிப்படையிலான முதலாளிகள் சிலரது கைகளில் உற்பத்திக் கருவிகள் தங்கியுள்ளன; விரிவாக்கப்பட்டு கேந்திரப்படுத்தப்பட்டுள்ள உலக பொருளாதாரம் போட்டா போட்டி தேசிய அரசுகளிடம் பங்கு போடப்படுவது பற்றிய பரஸ்பர விரோதம் வளர்ந்துள்ளது. ஏகாதிபத்திய நாடுகளிடையே உக்கிரமாகும். பரஸ்பர விரோதத்தினால் உருவானதும் கோடிக் கணக்கான மக்களை கொன்றதுமான 1914–1918, 1939–1945 காலத்தின் கொடிய உலக யுத்தம் போன்ற அழிவுகார மூன்றும் உலக யுத்தத்துக்கான மிரட்டல் தீவிரமடைந்துள்ளது.

உற்பத்தி சக்திகளது பாரிய அபிவிருத்தியால் மனிதகுலத்தின் தேவைகள் நிரப்பப்பெறுவதற்கான திறன் பூரணமாயுள்ளதாயினும், முதலாளித்துவத்துள் தொழிலாளரும் ஒடுக்கப்பட்டோரும் அதன் நேரெதிரான நிலைமையையே காணக் கூடியதாயுள்ளது. அமெரிக்காவிலேயே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை நூற்றுக்கு 24% வரை உயர்ந்துள்ளது. இந்த கணிப்பின்படி ஒவ்வொரு நாளும் 40000 சிறுர்கள் பட்டினிச் சாவிற்கு உட்படுகின்றனர். காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் மக்கட்தொகையில் 50%க்கு மேற்பட்டோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றனர்.

1948ல் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து ஆட்சியை தம் கைக்கு பெற்றுக்கொண்ட இலங்கையின் பலவீனமான முதலாளித்துவம் 40 ஆண்டுகளுக்கு பின்னர் நெருக்கடியினால் மூழ்கடிக்கப்பட்டு, தீவிர பலவீனம் கண்டுள்ளது; படுபிற்போக்குடன், தொழிலாளர் ஒடுக்கப்பட்டோர், கிராமப்புற வறிய மக்களை இராணுவ சர்வாதிகாரத்தால் நசுக்கிவிட்டுத் தன்வர்க்க ஆட்சியை பேணி ஈவிரக்கமற்று தலையிட்டுள்ள ஆளும் வர்க்கமாக மாறியுள்ளது. சமசமாஜ கம்யூனிச இ.தொ.கா. துரோக தலைமைகள் 1964லும் 1970–77லும் முதலாளித்துவ கூட்டரசாங்கங்களுள் நுழைந்து நடத்திய காட்டிக் கொடுப்புகளால் தொழிலாள வர்க்கத்தை குழப்பநிலைக்கு இழுத்து விட்டபின் ஆட்சியேற்ற யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இத்தாக்குதல்களின் புதிய கட்டத்தை ஆரம்பித்தது.

11430 கோடிகள் வரையில் வெளிநாட்டுக் கடனை அதிகரித்துக் கொண்ட யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்திய வங்கியாளருக்கு வட்டி, கடன் மீளளிப்புகளாக ஏற்றுமதி வருவாயில் 28%தை வழங்கும் நிலைமையை சிருட்டித்தது. இப்பணத்தின் பெரும்பாகம், ஒட்டுண்ணி சேவைப் பிரிவுகளின் விரிவாக்கத்திற்கு சடுபடுத்தியதன் பின், 1980–1985 கால கட்டங்களுள் நூற்றுக்கு 5.5 விகித பொருளாதார விரிவாக்கம் ஏற்படுத்திக் கொண்டதாக கூறும் யூ.என்.பி. அரசாங்கம் 1987ல் அது 1.5% ஆக வீழ்ச்சியுற்றுள்ளதாக அறிவித்தது. ஆசியாவில் அதிக குறைந்த மட்ட சம்பளம் வழங்கும் நாடாக இலங்கையை ஏற்படுத்தியமை; வேலையற்றோர் எண்ணிக்கையை பல்வேறு பாகங்களிலும் நூற்றுக்கு 18—28 வரை உயர்த்தியமை; தோட்டத்துறையிலும் அரச துறையிலும் தனியார் முதலாளித்துவ துறையினை நட்டத்தியங்குவதாக பெயரிட்டு மூடுவிழா நடத்தியமை, பல்தேசிய கம்பெனிகள் வர்த்தகம் உற்பத்தி துறை உரிமைகளை கைப்பற்றி சுரண்டலை தீவிரப்படுத்தியமை; பல்தேசிய கம்பனிகள் ஏகாதிபத்திய வங்கி பொருளாதாரத்தில் ஆட்சிக்காக நேரடியாக தலையிடல்; வைத்திய, கல்வி உள்ளடங்கலான சமூக சேவைகளை வெட்டல் என்பன முதலாளித்துவ விரிவாக்கத்தின் கீழ் தொழிலாள வர்க்க, வறிய மக்கள் முன் அபிவிருத்தி கண்டுள்ள ஆழமடைந்துள்ள நிலைமைகளாகும்.

## 3. முதலாளி வர்க்க அரசியல் வேலைத்திட்டம்

இந் நெருக்கடியினுள் இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் வேலைத் திட்டத்தை உணர்த்தும் வகையில் 'பன்னாட்டுக் கம்பனிகளை தருவித்து நாட்டின் பிரச்சினையை தீர்க்க நாம் தொழிற்படுகின்றோம்' என யூ.என்.பி.யின் தலைவர் ரஞ்சன் விஜேரத்ன கம்பஹாவில் நடைபெற்ற கட்சி அங்கத்தினர் மகா நாட்டில் குறிப்பிட்டார். முதலாளி வர்க்கத்திற்கு உள்ள ஒரே வேலைத் திட்டம், ஏகாதிபத்தியவாதிகளின் காலடிகளை வருடியபடி கடன் பிச்சை பெற முயலும் அதே வேளையில், கழுத்தறுப்புப் போட்டியில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளின் பன்னாட்டுக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அவற்றின் தரகர்களாக செயற்படுவதே. அதன் பொருட்டு தொழிலாள வர்க்கத்தினையும் ஏழை விவசாயிகளையும், தமிழ் தேசிய இனத்தினையும் நசுக்கி இராணுவ சர்வாதிகாரத்தினை கட்டி எழுப்புதலே முதலாளி வர்க்கத்தின் அரசியல் வேலைத்திட்டமாகும். வட–கீழ் மாகாணங்களிற்கு இந்திய இராணுவத்தை அழைத்து, தமிழ் விடுதலைப் போராட்டத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கத் தொழிற்பட்டு வரும் யூ.என்.பி அரசாங்கம் இராணுவத்தை நாடு பூராவும் பலப்படுத்தி வருகின்றது. நாடு பூராவும் முகாம்கள் அமைத்து இராணுவத்தை குவிப்பதன் மூலமும் பச்சைப் புலிகள், தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் மூலம் குண்டர் படை அணிகளை திரட்டுவதன் மூலமும் இராணுவ சர்வாதிகார இலக்குடன் செயற்பட்டு வருகின்றது.

உலக முதலாளித்துவ நெருக்கடியின் சவுக்கடியினால் தோட்டத்துறை நசிந்து போயுள்ளது.

1985ல் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் (நிலையான விலைகளில்) 434 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகும்; இது 1986ல் 281 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகவும் 1987ல் 280 மில்லியன் எஸ்.டீ.ஆர். ஆகவும் வீழ்ச்சி கண்டதாக மத்திய வங்கி அறிக்கை குறிப்பிட்டது. ஏகாதிபத்திய ஏகபோக கம்பனிகள் உலக சந்தையின் விலைகளை இயக்கிய வண்ணம் இலாபத்தைச் சூறையாட நடாத்திவரும் வேலைத் திட்டங்களாலும், தேயிலை ஓர் அத்தியாவசியமற்ற பண்டமாக இருப்பதாலும் தேயிலை விலையினதும், வருமானத்தினதும் வீழ்ச்சியை தவிர்க்க முடியாது உள்ளது. இந் நெருக்கடியின் மறுஅம்சம் இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு உலகச் சந்தையில் இருந்து வந்த பங்கு 1985ல் நூற்றுக்கு 17 வீதமாக



படிப்பகம்

www.padippakam.com

வீழ்ச்சி காணத் தொடங்கியதே:

தேயிலை விலை வீழ்ச்சி கண்டு உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பதால் தோட்டப் பராமரிப்புக்கள் சீர் கெட்டுப் போயுள்ளன. இவற்றினை யூ.என்.பி. அரசாங்கம் 'இலாப மற்ற'தாகக் குறிப்பிட்டு சில தோட்டங்களை மூடியும் உள்ளது: இதனால் முழுமையாகப் பார்க்கும் இடத்து தேயிலை உற்பத்தி வீழ்ச்சி காணும் போக்கு ஆரம்பித்துள்ளது. தோட்டங்களை மூடும் யூ.என்.பி. அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினால் உற்பத்தி நிலத்தின் அளவு (1985) 23,1000 ஹெக்டேயரில் இருந்து (1986) 22,3000 ஹெக்டேயராகவும் 1987ல் 22,1000 ஹெக்டேயராகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

1984 ல் 1 கிலோகிராம் தேயிலை உற்பத்தி செலவுக்கு மேலாக கிடைத்த லாபம் ரூபா 12.45 ஆகும். ஆனால் 1985ல் இது 35 சதமாக வீழ்ச்சி கண்டதோடு 1986ல் உற்பத்திச் செலவு ரூபா 35/- ஆகியது. கிலோவுக்கு கிடைத்த விலையோ ரூபா 30.38.

3 ஆண்டுகளுக்கு முன்னர் உலக வங்கி தோட்டத் தொழிலாளர்களை உலக நெருக்கடியின் விளைவுகளுக்கு பலியாக்கும் பொருட்டு பின்வரும் வேலைத் திட்டத்தை முன்வைத்தது:

- தோட்டங்களை நிர்வகிக்கும் முக்கிய இரண்டு சபைகளான ஜனவசம், அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களை கலைத்தல்—இதன் கீழ் முதல் நடவடிக்கையாக தோட்டங்களில் நிறைவேற்று அதிகாரத்தை தோட்ட அதிகாரிகளுக்கு (சூப்பிரெண்டன்களுக்கு)வழங்கி, பின்னர் படிப்படியாக வெளிநாட்டு, உள்ளூர் முதலாளித்துவ கம்பனிகளுக்கு அவற்றை விற்பனை செய்தல்.
- 'இலாபமற்றது' என அரசாங்கத்தினால் வகுக்கப்படும் தோட்டங்களை மூடுதலும் தனியார் முதலாளிகளுக்கு கையளித்தலும், ஏற்கனவே ஆரம்பமாகி உள்ள இத்தாக்குதலின் கீழ் அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை தோட்டக் கம்பனி 'இலாபமற்ற' தோட்டங்களை தம் வசம் பொறுப்பேற்றுக் கொண்டு அவற்றை மூடுதல் அல்லது தனியார் துறைக்கு கையளித்தல்.
- 'மறுசீரமைக்கப்பட்ட' தோட்டங்களின் செலவுகளுக்கு மேலாக நூற்றுக்கு 20% வருமான இலக்குடன் அத்தோட்டங்களை நடாத்துதல்—உலக வங்கி இந்த மறுசீரமைப்பின் ஒரு இலக்காக வெளிநாட்டு கடன்களை செலுத்தும் பொருட்டு எதிர் காலத்தில் அவசியமான வெளிநாட்டுச் செலாவணியை உழைத்தல்.

இலங்கை முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளைப் போலவே அதன் முக்கிய துறையான தேயிலை தோட்டத் துறையில் உக்கிரம் கண்டுள்ள நெருக்கடியை யூ.என்.பி. அரசாங்கத்தினாலோ அல்லது வேறு முதலாளித்துவ அரசாங்கங்களாலோ தீர்க்க முடியாது. உலக வங்கியின் வேலைத் திட்டமானது, முன்னெருபோதும் இல்லாத விதத்தில் அடிமைச் சுரண்டலுக்கு தொழிலாள வர்க்கத்தை உள்ளாக்கி கசக்கி பிழிவதன் மூலம் நெருக்கடியை 'தீர்க்கும்' வேலைத்திட்டமாகும்.

1988 ஜூனில் பாரிசில் கூடிய 'இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின்' கூட்டத்தில் இந்தப் பிற்போக்கு வேலை திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஏகாதிபத்திய பிரதிநிதகள் யூ.என் பி. அரசாங்கத்துக்கு கட்டளையிட்டனர்.

உலக சந்தையில் விலையும், இலங்கைக்குரியபங்கும் வீழ்ச்சி காணுகையில் உற்பதிச் செலவு அதிகரிக்கின்றது. இந்நிலையில் நூற்றுக்கு 20%மாக வருமான இலக்கை அடைவது என்பது, முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இலட்சக் கணக்கில் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தலையும், சம்பள வெட்டுகளையும், சகிக்க முடியாத மட்டத்துக்கு வேலையை துரிதப்படுத்துவதையும் குறிக்கின்றது. உலக வங்கி தோட்டத் துறையை ஏற்கனவே தனது 'கண்காணிப்பின்' கீழ் கொண்டு வந்துள்ளதோடு உத்தேச வேலைத் திட்டத்தினை அமுல் செய்யும் பிற்போக்கு நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது.

## 4.

## இந்திய–இலங்கை ஒப்பந்தம்

குடியுரிமை பறிக்கப்பட்ட 2 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தல் இந்திய–இலங்கை உடன்படிக்கையின் ஒரு சரத்தாகும். ஜயவர்தன–காந்தி கைச்சாத்திட்ட ஒப்பந்தம் ஒன்றுடன் ஒன்று இணைந்த எதிர்ப்புரட்சி இலக்குகள் இரண்டைக் கொண்டுள்ளது. முக்கிய இலக்கு, தமிழ் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்தல், இரண்டாவது, இலங்கை தொழிலாள வர்க்கத்தினதும்' ஏழை விவசாயிகளதும் போராட்டத்தை தோற்கடிக்கும் பொருட்டு யூ என்.பி. அரசாங்கம் உள்ளடங்கலான சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினை பலப்படுத்துதல். 1948ல் ஏகாதிபத்தியவாதிகளுடனான சதியின் மூலம் திணிக்கப்பட்ட முதலாளித்துவ ஐக்கிய அரசினை காக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பிற்போக்கு இந்திய–இலங்கை உடன்படிக்கை இந்த விதத்திலேயே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை முதலாளித்துவ நெருக்கடியின் பலிகடாக்களாக்கி, அவர்களின் தொழில்களை இனவாத அடிப்படையில் நாசமாக்கி தென் இந்திய வீதிகளில் அலைய வைக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையின் மூலம் இருநாட்டினதும் ஆட்சியாளர்கள் மீண்டும் ஒன்றுபட்டுள்ளனர். யூ.என்.பி. – சி.ல.சு.க. முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தினை தூண்டுதல், அரசியல் கைதிகளை கைது செய்தல் உள்ளடங்கலான அரச வேட்டைகளை உக்கிரமாக்கியுள்ளனர். இந்த அழிவுகளை திணிக்கும் பொருட்டு தொழிலாளர்களின் இயக்க சக்தியை சிதறடிக்கும் பிற்போக்கு அவசியத்தின் அடிப்படையிலேயே இவற்றைச் செய்கின்றனர்

தியத்தலாவையில் இது வரை இருந்து வந்த இராணுவ முகாமுக்கு மேலதிகமாக தோட்டத்துறையை சுற்றிவளைக்கும் பொருட்டு நுவரேலிய, இரத்தினபுரி, தலவாக்கலையில் நிரந்தரமான இராணுவ முகாம்களை யூ.என்.பி. அரசாங்கம் அமைத்துள்ளது. சி. ல. சு. க. முதலாளிகளின் இனவாத பிரச்சாரத்தின் பக்க பலத்துடன் யூ.என்.பி. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களையும் நிலமற்ற ஏழை சிங்கள விவசாயிகளையும் மோத வைக்கும் விதத்தில் தோட்டத் துறையின் மத்தியில் சிங்கள குடியேற்றங்களை அமைக்கும் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. இது சிங்கள முதலாளிகள் பிரித்தானிய ஏகாதிபத்திய எஜமானர்களின் அங்கீகாரத்துடன் 1950பதுகளின் கடைப்பகுதியில் இருந்து கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி இன்றைய தமிழர் விரோத படுகொலை யுத்தம் வரை விஸ்தரித்த ஆத்திரமூட்டும் வேலைத் திட்டத்தினை தோட்டத்துறையினுள்ளும் எடுத்துச் செல்லும் பிற்போக்கு இயக்கமாகும். இவை அனைத்துடனும் தொடர்பு பட்ட விதத்தில் யூ.என்.பி. – சி.ல.சு.க. முதலாளிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக குண்டர்களை அணி திரட்டுகின்றார்கள் யூ.என்.பி. ஜூண்டாவான ஜாதிக சேவா சங்கத்தின் அதிகாரிகள், அநேக தோட்ட அதிகாரிகள் ஆகியோர் இந்த ஆத்திர மூட்-



படிப்பகம்

www.padippakam.com

டும் குண்டர் இயக்கத்தின் பாகமாவர்,

தமிழ் தேசிய இனத்தின் மீது ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய–இலங்கை முதலாளிகளதும், ஆணையை இராணுவ பலத்தினால் திணிக்க இடம் பெறும் தாக்குதல் இலங்கையினுள்ளும் தொழிலாள வர்க்கத்தை சிதறடித்து இராணுவ ஆட்சியை திணிக்க நடைபெறும் வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகும். யூ.என்.பி. அரசாங்கம் இலங்கையினுள் இராணுவத்தை கட்டவிழ்ப்பதை தமிழ்த் தேசிய இனத்துக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் எதிரான இனவாத ஆத்திரமூட்டலை தூண்டிவிடுவதுடன் தொடங்கியது.

## 5. தலைமைகளின் எதிர்ப்புரட்சி பாத்திரம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் யூ.என்.பி.–உலக வங்கி சர்வாதிகாரத்தை சிதறடிக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதற்கு எதிராக அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி திட்டங்களின் கையாட்களாகியுள்ளனர். இந்திய–இலங்கை உடன்படிக்கைக்கு இவர்கள் வழங்கும் ஆதரவு, இத்துரோகத்தினை புதிய கட்டத்துக்கு உயர்த்தி உள்ளது. தமிழர் தாயகத்தில் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இவர்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவளிக்கின்றனர்கள்; இதன் மூலம் அதனுடன் இணைந்து இலங்கை தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் எதிராக யூ.என்.பி. அரசாங்கம் உள்ளடங்கலான பிற்போக்கினை பலப்படுத்துகின்றனர். இத் தலைவர்களின் முழு அங்கீகாரத்துடன் பேணப்பட்டு வரும் இந்திய–இலங்கை உடன்படிக்கையான்து இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, நாடு கடத்த செயற்படுகின்றது. ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினை நசுக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் இணையும் எந்தவொரு தலைமையும் தாம் பிரதிநித்துவம் செய்து கொள்வதாகக் கூறிக் கொள்ளும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை எதிர்ப்பதோடு, முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடனும் அரசுடனும் அடிமுதல் தலைவரை பிணைத்து வைக்கின்றனர். சமசமாஜ – கம்யூனிஸ்ட் – இ. தொ. கா. தலைவர்களின் வர்க்க சமரச அரசியலின் இந்த இயக்கவியல் வரலாற்று ரீதியில் நிருபிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையின் அணிதிரண்ட தொழிலாள வர்க்கத்தின் பெரும் தொழிற் சங்கமான தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எஸ். தொண்டமான் எதிர்ப்புரட்சி திட்டங்களை தயார் செய்யும் யூ.என்.பி. அரசாங்கத்தின் அமைச்சர் அவையின் உறுப்பினர் ஆவார். தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களின் முக்கிய ஏஜண்டாக தொழிற்படுபவரும் அவரே.



ஜே ஆர். — தொண்டமான்

இந்த எதிர்ப்புரட்சி தலைவர், முதலாளித்துவ ஐக்கிய அரசினை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து காப்பதற்கு முழுமனே சபதம் பூண்டுள்ளார். ஏகாதிபத்தியத்தினையும் இந்திய–இலங்கை முதலாளித்துவ ஆளுமையினையும், முதலாளித்துவ அமைப்பின் உயிர் வாழ்வினையும் வெளிப்படையாக அங்கீகரித்துக் கொண்டுள்ள தொண்டமான் உள்ளடங்கலான இ. தொ. கா. தலைவர்கள் தொழிலாளர்கள், ஏழைகள், தமிழ் தேசிய இனத்தினர் தமது தலைவிதியை முதலாளித்துவ அமைப்பினுள் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அங்கீகரித்த முதலாளித்துவ ஏஜன்ட் கும்பலை சேர்ந்தோராவர். அவர்கள் கம்யூனிசத்தையும் சோசலிசத்தையும் அப்பட்டமாக எதிர்க்கின்றனர்.

முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி பெருமளவில் உக்கிரமடைந்து தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கடும் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந் நிலைமையில் முதலாளித்துவத்தின் எதிர்ப் புரட்சி ஏஜனடாக தமது சுயரூபத்தை தொணடமான தலைமை காட்டிக் கொள்ள நேரிட்டுள்ளது. 1987 மார்ச்சில் (தமிழ் நாட்டில்) மதுரை நகரில் அவர் தமது பிற்போக்கு நிலைப்பாட்டை இங்ஙனம முன் வைத்தார்: ''தலைக்கு எதிராக ஆயுதம் தூக்கும் எந்தவொரு மக்கள் குழுவினையும் ஒழித்துக் கட்ட அந் நாட்டிற்கு உரிமை உண்டு''

1963 சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் தோட்டத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, தென் இந்தியாவுக்கு நாடு கடத்த இந்திய–இலங்கை ஆளும் வர்க்கம் தீர்மானித்த வேளையில் தோட்டத் தொழிலாளர்களிடையே பலத்த எதிர்ப்பு உருவானது. ஸ்டாலினிஸ்டுகள் மட்டுமன்றி சமசமாஜ தலைவர்களும் இந்த சிங்கள முதலாளித்துவ இனவாத தொழிலாளர் விரோத தாக்குதலுக்கு முழுமனை ஆதரவளித்தனர். ஒப்பந்தத்தை எதிர்த்த தொழிலாளர்களின் பிரதிநிதியாக தம்மைக் காட்டிக் கொண்ட தொண்டமான் 1977ல் யூ என்.பி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர செயல் பட்டார். அன்று தொடக்கம் ஏகாதிபத்திய வங்கியாளர்களினால் தூண்டிவிடப்பட்ட இலங்கை முதலாளி வர்க்கத்தின் சகல தாக்குதல்களினதும் தயாரிப்பாளராக தொண்டமான் தலைமை செயல்பட்டது. இதனை யூ.என்.பி. அரசாங்கத்தினுள் இருந்து கொண்டே அது செய்து வருகின்றது.

தாம் தோட்டத் தொழிலாளர்களின் 'நலன்களின்' பேரிலேயே யூ.என்.பி. அரசாங்கத்தினுள் இருந்து வருவதாக தொண்டமான்–செல்லச்சாமி தலைமை கட்டவிழ்த்து வந்த கதையளப்புக்கள் சிதறடிக்கப்பட்டு நீண்ட காலமாகி விட்டன. எனினும் சமசமாஜ ஸ்டாலினிச–மத்தியவாத தலைவர்கள் இதற்கு எந்தவிதத்திலும் குறையாத விதத்தில் செய்துவரும் காட்டிக் கொடுப்புகளினாலேயே இவர்கள் அரசியல் உயிர் பிழைத்துள்ளனர், 1977, 1979, 1980, 1983 1985, 1987ல தோட்டத் தொழிலாளர்கள் யூ என்.பி.–சி.ல.சு.க குண்டர் படைகளதும் அரச இயந்திரத்தினதும் இனவாத தாக்குதல்களுக்கு உள்ளாகினர். இந்த தாக்குதல்களுக்கான சக்தியை அரசு – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் உதவியோடு இ.தொ.கா. தலைமை தோட்டத் தொழிலாளர்,



படிப்பகம்

www.padippakam.com

களை அரசியல், அமைப்பு ரீதியில் நிராயுதபாணியாக்கியதன் மூலம் பெற்றுக் கொண்டது.

இந்திய-இலங்கை உடன்படிக்கையை திணிப்பதில் தொண்டமான் முக்கிய பங்கு வகித்தார். இதன் மூலம் தமிழ் தேசிய இனத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் எதிரான முதலாளித்துவ எதிர்ப்புரட்சி திட்டங்களை பலப்படுத்துவதற்கும், தாம் பிரதிநிதித்துவம் செய்யும் 2 இலட்சம் தொழிலாளர்களின் தொழில்களை நாசமாக்கவும், அவர்களை நாடு கடத்தவும் அங்கீகாரம் வழங்கினர். 1963 சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு தாம் எதிர் என்ற தொண்டமானின் வாயடிப்புக்கள் சிதறுண்டு போயுள்ளன. கொழும்பு ஜனாதிபதி மாளிகைக்கும், புதுடில்லிக்கும், சென்னைக்கும். திரும்பவும் தோட்டப் பகுதிக்கு ஓடித்திரிந்து தொண்டமான் முதலைக் கண்ணீர் வடித்தது, தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கே என்பதை எந்தவொரு நனவுள்ள தொழிலாளியும் இன்று புரிந்து கொள்ள முடியும்,

தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்துவது பற்றிய தொண்டமானின் புதிய தீர்வு என்னவெனில் (அ) முடியுமானால் இனவாத கலவரங்களின் போது இந்தியாவுக்கு வர 'கஷ்டமாக' உள்ள ஆட்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவதோடு அதற்குச் சமமாக இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தி செல்ல கஷ்டமாயுள்ள தொழிலாளர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கி எஞ்சியோரை நாடு கடத்தல். (ஆ) இந்தியாவுக்கு இதுகாறும் அனுப்பப்பட்டுள்ளவர்களை இந்தியா இதுகாறும் கணித்தவிதத்தில் அன்றி எதிர்காலத்தில் தரத்தும் தொழிலாளர்களை 'நன்கு' கவனித்தல். இக் கோரிக்கைகளை' அமுல் செய்யும்படி தொண்டமான் காந்தி–ஜயவர்தன முன்நிலையில் அடிபணிதல்;

இவை அனைத்தும் தமிழ் தேசிய இனத்தினதும் இலங்கை தொழிலாளர்களதும் இரத்தத்தில் தோய்ந்த தமது கரங்களை மூடிமறைப்பதற்கான கையாலாகாத்தனமான முயற்சிகளாகும். ஆனால் அவை பெரிதும் சிரமமான முயற்சிகளாகும்; தோட்டத் தொழிலாளர்களை பயங்கரவாதிகள் என சேறடித்து அரசியல் கைதிகளாக கைது செய்யும் அரசவேட்டை ஆரம்பமான சமயத்தில் தொண்டமான் முதலாளித்துவ 'சட்டத்தினதும் சமாதானத்தினதும்' ஏஜண்டாக வெளிப்பட்டார். பொலிசாரினால் கைது செய்யப்படவேண்டியவர்களின் பட்டியலை கொடுத்தால் அவர்களை பிடித்துக் கொடுக்கும் பணியை தாமே செய்வதாக அவர் குறிப்பிட்டார்; அவர் தமது மாவட்ட ஏஜண்டுகள் பலரை பொலிஸ் ஏஜண்ட் வேலையில் ஈடுபடுத்தியதோடு, கைது செய்யப்பட்ட 160 இளைஞர்கள் தொண்டமானின் மௌனத்தின் கொடிய அங்கீகாரத்துடன் சிறைச்சாலைகளில் சித்திரவதைக்குள்ளாகி வருகின்றனர்.

ஜயவர்தன அரசாங்கத்தின் இரத்தக் களரிகளுடன் சம்பந்தப்பட்டுள்ள தொண்டமான், தொழிலாளர்கள் இந்த முதலாளித்துவ அட்டூழியங்களை அங்கீகரித்தவாறு 'பாதயாத்திரை', 'உபவாசம்', 'அஹிம்சை' மூலம் உயிரைப் பேணிக்கொள்ள வேண்டும் எனக் கூறிக் கொண்டார்.

தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்துவதற்கும் அரகியல் கைதிகளாக கைது செய்வதற்கும் எதிராக வெடித்த பிரச்சார இயக்கங்களின் முக்கிய எதிரியாக தொழிற்படுபவர் தொண்டமானே.

வேலைநீக்கங்கள், பணவீக்கத்தால் சம்பளத்தின் மதிப்பிறக்கம் ஆகியவற்றுக்கு முகம் கொடுத்துள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு இ.தொ.கா. தலைமை சிபார்சு செய்துள்ள மற்ற வேலைத்திட்டம் 'சுய தொழில் தேடுதல்', ஆகும். அத்தோடு அவர்கள் நெஸ்லே, மில்கோ போன்ற கம்பனிகளுக்கு பால் விநியோகம் செய்யும் அரை விவசாய தொழிலாளர்களாக தோட்டத் தொழிலாளர்களை மாற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

காலனித்துவ, அரைக் காலனித்துவ சுரண்டல் முறையாகத் தோட்டத் தொழிலாளர்களை 'தனிமைப்படுத்தும்' நடவடிக்கை அமுல் செய்யப்பட்டது. இந்த விலங்கினை உடைத்து எறிய தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் அவசியத்தை, தொழிலாளர்களை கிராமமயப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்குள் சிறைப்படுத்த இ.தொ.கா. தலைவர்கள் முயலுகின்றனர்.

தாம் காலூன்றியுள்ள முதலாளித்துவ அமைப்பினதும், அரசினதும் நெருக்கடி உக்கிரம் அடையும் நிலைமையினுள் இத் தலைவர்கள் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு எதிராகப் பாய்ந்து விழத் தொடங்கினர். 1988 ஜனவரி 31ம் திகதி இடம்பெற்ற அடையாள வேலை நிறுத்தத்தின் போது இது வெளிப்பாடாகியது. இந்த வேலை நிறுத்தத்தை உடைக்க தொண்டமான்–'செல்லச்சாமி தலைமை கருங்காலிகளாக தலையிட்டதோடு, சில மாவட்டங்களில் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட மாவட்டத் தலைவர்களுக்குத் 'தண்டனை'யும் விதித்தனர்.

1977ல் இருந்து தொண்டமான் அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டதால் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்தது நிவாரணம் எனப்படுவது அன்று; முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியின் உக்கிரத்துடன் இணைந்த வண்ணம் மக்கள் படுகொலை வரை வளர்ச்சி கண்ட தாக்குதல்களுக்கு அவர்கள் உள்ளாக நேரிட்டது. தோட்டத் தொழிலாளர்கள் எதிர்த் தாக்குதல் தொடுக்க முன்வந்த போதெல்லாம் தொண்டமானின் நடவடிக்கையானது அதைத் தடுத்து ஜனாதிபதி ஜயவர்தனவில் 'நம்பிக்கை வைக்கும்படி' ஆலோசனை வழங்குவதே. மீண்டும் மீண்டும் உக்கிரம் கண்ட தாக்குதல்களின் எதிரில் அவர்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணிகளாக்குவது தொண்டமானின் பணியாகியது.

அரசாங்கத்தில் 9 ஆண்டுகள் இருந்ததன் பின்னர் 1986ல் கண்டியில் நடைபெற்ற இ. தொ. கா. மகாநாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் சமூக நிலைமையைப்பற்றி தொண்டமான் சமர்ப்பித்த அறிக்கை, அவரின் காட்டிக் கொடுப்பு 'ரெக்கோட்டின்' ஒரு பாகமாகியது; அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

''தோட்ட லைன் அறைகளின் துன்பகரமான நிலைமைகள் பிரசித்தமானவை; அநேகமாக ஒரு குடும்பத்துக்கும் அதிகமானோர் பெரிதும் அசுத்தமான 120 சதுர அடிகளைக் கொண்ட தனி அறையில் ஜீவிக்க நேரிட்டுள்ளது. நிலைமையை மாற்றவேண்டியதன் அவசியத்தை பற்றி அநேக அறிக்கைகள் வெளியிடப்பட்ட போதிலும் முன்னேற்றம் மந்தகதியாயுள்ளது. இடைக்கால மூதலீட்டு திட்டத்தின் கீழ் கூட வீடு வழங்கும் ஏதேனும் அபிவிருத்திகளை நூற்றுக்கு 15 வீதம் மட்டுமே பெற்றுக் கொள்ள கூடியதாயுள்ளது.

''...சௌக்கிய நிலைமையில் அற்பமான முன்னேற்றமும் சிசு மரண எண்ணிக்கையில் வீழ்ச்சியும் காணப்பட்ட போதிலும் பிறப்பில் நிறை குறைவு, போஷாக்கின்மை, அசுத்தமான சூழல் தோட்டத் தொழிலாளர்களிடையே இன்னமும் நிலவும் அம்சங்களாகும்.''

(1987 கண்டி மகா நாட்டில் தொண்டமானின் அறிக்கை)

'... 10 இலட்சத்துக்கும்



படிப்பகம்

www.padippakam.com

அதிகமான மலைநாட்டு எமது ஜனத் தொகையினுள் பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் பெரிதும் அற்பம். நாடு பூராவும் தேசிய அடிப்படையில் படிப்பறிவற்றோர் எண்ணிக்கை நூற்றுக்கு 16 வீதமாகும். ஆனால் மலைநாட்டு ஜனத் தொகையை மட்டும் எடுப்பின் நூற்றுக்கு 64% படிப்பறிவற்றோராக கணக்கிடப்பட்டுள்ளனர் ...... (அம் மகா நாட்டில் வீ. அண்ணாமலை சமர்ப்பித்த அறிக்கை)

யூ.என்.பி. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'வறுமை ஒழிப்பு பற்றிய அதிகாரிகளின் உயர்மட்ட கமிட்டியின்' அறிக்கையின்படி மோசமான போஷாக்கின்மை தோட்டத் தொழிலாளர்கள் வாழும் மாவட்டங்களிலேயே பெரிதும் அதிகரித்து காணப்படுகின்றது. மோசமான, போஷாக்கின்மை நுவரேலிய மாவட்டத்தில் நூற்றுக்கு 64.3 வீதமாகவும் பதுளை மாவட்டத்தில் 51.5%மாகவும் உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பணவீக்கத்தினால் பெரும் அளவில் அரிக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தினால் பெரிதும் குறைத்து மதிப்பிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி 1985ல் நூற்றுக்கு 116.6% மாக இருந்த மொத்த சம்பள வெறுமானம் 1986ல் நூற்றுக்கு 113,8% மாகவும் 1987ல் 110.8 வீதமாயும் விளங்கிற்று.

சமசமாஜ — கம்யூனிஸ்ட் தலைவர்களும் அவர்களின் மத்தியவாத கையாட்களும் இ.தொ.கா. தலைவர்களைப் பற்றி மோசடியான முறையில் கண்டனங்களை முன்வைத்த போதிலும் ஒன்றுக் கொன்று சமானமான காட்டிக் கொடுப்பில் கூட்டுச் சேர்ந்துள்ளனர். தோட்டத் தொழிலாளர்களை போராட்டங்களில் இருந்து தள்ளி வைக்கும் பொருட்டு இத் தலைவர்கள் வேலையை பகிர்ந்து கொண்டும், இணைந்தும் தொழிற்பட்டு வருகின்றனர்.

இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும் இவர்கள் ஒன்றிணைந்து ஆதரவு வழங்கினர். 1964ல் சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்கி, தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்ற ஒன்றிணைந்த சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இன்று இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் அவர்களை வெளியேற்றவும் இணங்கியுள்ளனர். அரசியல் கைதிகளின் கைது சம்பந்தமாக இவர்கள் கடைப் பிடிக்கும் மௌனத்தின் மூலம் யூ, என்.பி, அரச ஒடுக்கு முறைக்கு தமது அங்கீகாரத்தை வழங்கி உள்ளனர்.

1985 ஏப்பிரல் மாதத்தில் சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் மிரட்டல்களுக்கும் தலைவர்களின் பின்னடிப்புக்களுக்கும் மத்தியிலும் நடாத்திய பொது வேலை நிறுத்தத்தின் மூலம் பரந்த போராட்ட வீரியத்தை வெளிக்காட்டியதோடு மட்டுமன்றி அவ்வேலை நிறுத்தம் புரட்சிகர இலட்சணங்களையும் சூல் கொண்டிருந்தது. தமிழ் விடுதலைப் போராட்டம் நீடித்துவரும் நிலைமையின் மத்தியிலும் தோட்டத் தொழிலாள வர்க்கத்தின் இப் போராட்டம் தொடுக்கப்பட்டது. அதன் மூலம் ஏனைய தொழிலாளர்களும் முன்னணிக்கு தள்ளப்படும் உத்வேகம் ஏற்பட்டு, யூ என் பி. அரசாங்கம் வீழ்ச்சி காணும் நிலைமையும் பெரும் தொழிலாளர் போராட்டங்களின் வெடிப்பும் ஏற்படும் ஆபத்தினை முதலாளி வர்க்கத்துக்கு தோற்றுவித்தது.

அந்த வேலை நிறுத்தத்தின் 10ம் நாள் ஜனாதிபதி ஜயவர்தன இ.தொ.கா.—சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்தார். அங்கு இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்தியதை தொடர்ந்து அவர்களையும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் கொண்ட சம்பள உயர்வு கமிட்டி நிறுவப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதன் முதல்வேலை வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை வேலைக்குத் திருப்பி அனுப்புவதே. இரண்டாவது வேலை: சம்பள கோரிக்கையை மூடிமறைப்பது.

தொழிலாளர்களின் எதிர்ப்பு உக்கிரம் கண்டதை தொடர்ந்து 1988 ஜனவரி 31ம் திகதி அடையாள வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இ.தொ,கா தலைவர்கள் வேலை நிறுத்தத்தை உடைக்க முடிவு செய்தபோதிலும் சமசமாஜ-கம்யூனிஸ-நவ சமசமாஜ தலைவர்கள் வேலை நிறுத்தம் செய்ய தீர்மானித்ததை தொடர்ந்து இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் அதில் பங்கு கொண்டனர்.

தொண்டமானின் பிடி உடைந்து போகும் நிலையில் போலி போர்க் குணத்தைக் காட்டுவதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களை தமது கைப்பிடிக்குள் கொணர்வதும், அவர்களின் போராட்டத்துக்கு எல்லைகள் போடுவதும் அவசியம் என இத் தலைவர்கள் எண்ணிக் கொண்டுள்ளனர்.

## 6. முதலாளித்துவ மக்கள் முன்னணி

தொழிலாள வர்க்கத்தின் பரந்த புரட்சிகரப் போராட்டங்கள் வெடிப்பதை புரிந்து கொண்டுள்ள சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ அமைப்பினுள் அவற்றை சிறைப் பிடிக்கும் பொருட்டு இந்திய-இலங்கை உடன்படிக்கையை பேணுதல், முதலாளித்துவ சொத்து முறையை காத்தல் முதலான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடன் மக்கள் முன்னணியை திணித்துள்ளனர். மோசமான முறையில் ஆழமாகி வரும் உலக நெருக்கடியின் ஒரு பாகமாக இலங்கையில் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி உக்கிரமடைகையில் முதலாளித்துவ சொத்து முறையின் உள்ளே 'தேசிய புனருத்தாரணத்தை' உருவாக்க முடியும் என இத் தலைவர்கள் துரோகமான முறையில் தொழிலாள வர்க்கத்துக்கு கூறி வருகின்றனர்.

இ.தொ.கா, தலைவர்களும் சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களும் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே எடுத்துச் செல்லும் வேலைத் திட்டத்தின் சாராம்சம் இது தான்: அந்தந்த துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு அந்தத்துறைகளுக்குள்ளேயே தீர்வு உண்டு; முதலாளித்துவ அமைப்பை சீர்திருத்துவதன் மூலம் தீர்வு காண முடியும்; (முதலாளித்துவ அமைப்பில்) 'தேசிய புனருத்தாரணத்தை' ஏற்படுத்திக் கொள்ளலாம்; தொழிலாள வர்க்கமோ அல்லது வேறு ஒடுக்கப்படும் பகுதியினரோ முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக போராடக் கூடாது: அத்தகைய போராட்டம் ஐக்கி அரசுக்கு எதிராக செல்வதால் அவற்றை நிறுத்தவேண்டும்.

இந்தப் பிற்போக்கு வழிமுறைகள் மூலம் இத் தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தை வேலைத்தள மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பிளவுபடுத்தும் பிற்போக்கு பணியில் ஈடுபட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களை நகர்ப்புறத் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களில் இருந்து கூறு போட்டு வைக்கின்றனர். இலங்கை தொழிலாள வர்க்கத்தை தமிழ் ஈழ தொழிலாள வர்க்கத்தில் இருந்து பிரிக்கின்றனர். இத் தொழிலாளர்களை இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர்கள் உள்ளடங்கலான அதன் அனைத்துலக தொழிலாள வர்க்க படையணிகளில் இருந்து பிரித்து வைக்கச் செயற்படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களும், பாட்டா, ஏ.பீ.எம். போன்ற பன்னாட்டு கம்பனி தொழிலாளர்களும், இலங்கை முதலாளிகளது நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

தும் பிரச்சினைகளிலும் போராட்டங்களிலும் உருவ ரீதியில் மிகவும் அற்பமான மாறுபாடுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் இத் தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தை அங்ஙனம் பிரித்து வைக்கின்றனர். எனினும் தொழிலாள வர்க்கம் போராட்டத்துக்குக் கிளர்ந்ததும் இந்த அற்ப உருவங்கள் மறைந்து, நனவான முறையில் அப் போராட்டங்களை முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்காக ஐக்கியப் படுத்தும் அவசியம் தோன்றி உள்ளது; அனைத்துலக முதலாளித்துவ பொது எதிரிக்கு எதிராக அனைத்துலக தொழிலாள வர்க்க ஐக்கியத்தை கட்டி எழுப்பிய வண்ணம் போராட வேண்டிய பெரும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் வழி நடாத்தலின் கீழ் உருவான இந்திய–இலங்கை உடன்படிக்கையின் ஒடுக்குமுறை நிழலை நீடிப்பதன் மூலம் தொழில்களை அழிக்கவும், நாடு கடத்தவும், அந்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்களது கட்டளையின் பேரில் ஏனைய தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை அழிக்கவும் யூ.என்.பி. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போது மேற்சொன்ன உண்மை ருசுவாகியுள்ளது.


தோட்டத் தொழிலாளர்கள் சிறப்புப் பிரச்சினைகளைக் கொண்ட ஒரு குழுவானதால் சிறப்பு 'தீர்வு' பாதைகள் இருப்பதாக இ.தொ.கா. தலைவர்கள் கூறி வருகின்றார்கள். இந்த வேலைத் திட்டமும், தோட்டத் தொழிலாளர்களை தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பகுதியினரில் இருந்து பிரித்து வைக்க சமசமாஜ–கம்யூனிஸ்ட் தலைவர்கள் கடைப்பிடித்து வரும் வேலைத்திட்டமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. தொழிலாளர்களை இனவாகக் கோடுகள் மூலம் கூறுபோட்டு, தோட்டத் தொழிலாளர்களை தொழில்களில் இருந்து அப்புறப்படுத்த முதலாளித்துவ ஆளும் வர்க்கம் எடுக்கும் முயற்சிக்கும் அதற்குச் சேவகம் செய்யும் சமசமாஜ–கம்யூனிச–இ.தொ.கா. தலைவர்களின் வேலைத் திட்டத்துக்கும் எதிராக தொழிலாள வர்க்க ஐக்கியத்தினைக் கட்டி எழுப்பிய வண்ணம் போராடாது போகின் தோல்வி காண நேரிடும்.

★ நகர்புற, தோட்டத்துறை தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தமிழீழ, இந்தியத் தொழிலாளர்களின் ஆதரவை திரட்டிய வண்ணம் நடாத்தும் போராட்டத்துக்கு முன் செல்ல வேண்டும். அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து அனைத்துலக முதலாளித்துவ பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தின் பாதகையை தாங்க முன் செல்ல வேண்டும்; இந்திய–இலங்கை உடன்படிக்கைக்கும், இந்திய – இலங்கை படைகள் வட–கீழ் மாகாணங்களில் நடாத்தும் ஆக்கிரமிப்புக்களுக்கும் எதிராகப் போராடுதல் இந்த அனைத்துலகவாத ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கான அவசிய நிபந்தனையாகியுள்ளது.

★ முதலாளி வர்க்க எதிரிக்கு எதிராக போராட முதலாளி வர்க்கத்திலிருந்து சுயாதீனமாக போராடு– இ.தொ.கா. தலைவர்கள் யூ.என்.பி. அரசாங்கத்துக்கு வழங்கும் முண்டுகோலைப் போலவே சமசமாஜ–கம்யூனிச நவ சமசமாஜ கட்சிகளின் தலைவர்களும் இந்திய–இலங்கை உடன்படிக்கைக்கு வழங்கும் ஆதரவும், முதலாளித்துவ மக்கள் கட்சியுடன் உருவாக்கிக் கொண்டுள்ள கூட்டும் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனத்தை முதலாளி வர்க்கத்துக்கு பலியிடுவதாகும். முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் போராடும் பொருட்டு இக் கட்சிகளை முதலாளித்துவ கட்சிகளுடன் கொண்டுள்ள உத்தியோக பூர்வமானதும், உத்தியோகப்பற்றற்றதுமான கூட்டுக்களை உடைத்தெறியுமாறும், சுயாதீனமாகப் போராடும்படியும் தொழிலாள வர்க்கம் சமசமாஜ–கம்யூனிச–நவ சமசமாஜ–இ.தொ.கா. தலைவர்களை கோர வேண்டும்; அதற்கு எதிராகச் செல்லும் தலைமைகளை துரத்தியடித்து தொழிலாள வர்க்கத்தின வர்க்க சுயாதீனத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

★ சோஷலிச வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொள் உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பாகமாக இலங்கையில் முதலாளித்துவ நெருக்கடி ஆழமாகுகையில் தொழில், வாழ்க்கைத்தரம், சேவை நிலைமைகளை காப்பாற்றுவதற்கான ஒரே வழி, ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளிகளதும் சொத்துக்களை தொழிலாள வர்க்க நிர்வாகத்தின் கீழ் கொணர்வதே. தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்துவதும், தனியார் மயமாக்கமும், தொழில் வெட்டும், வாழ்க்கைத் தர வெட்டும், வேலை துரிதப்படுத்தலும் தொழிற் சங்க உடைப்பும், முதலாளித்துவ எதிர்ப்புரட்சி தயாரிப்பும் முதலாளித்துவ நெருக்கடியின் தவிர்க்க முடியாத பெறுபேறுகளாகும். ஆதலால் சமசமாஜ–கம்யூனிச–நவ சமசமாஜ தலைவர்கள ஏகாதிபத்திய சொத்துக்களையும் இலங்கை முதலாளித்துவ கம்பனிகள் வங்கியாளர்களின் பிடியையும் அப்படியே இருக்க விட்டு விட்டு 'தேசிய புனருத்தாரணத்தை' உருவாக்குவது பற்றி முன் வைத்துள்ள வேலைத்திட்டம் முற்றிலும் எதிர்ப்புரட்சி நப்பாசையாகும். முதலாளித்துவ சொத்து முறையை தூக்கி வீசக் கூடிய தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடிக்கு தீர்வு காண முடியும்.

★ முதலாளித்துவத்தை



கபரகலை தோட்டத் தொழிலாளர்களின் மறியல் போராட்டம்



படிப்பகம்

www.padippakam.com

தூக்கி வீசும் இப்போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் தமிழ் தேசிய இனத்தினதும் கிராமப்புற ஏழை விவசாயிகளதும் ஆதரவைத் தம் பக்கம் வெற்றி கொள்ளவேண்டும்; தமிழ் தேசிய இனத்தை தேசிய ஒடுக்கு முறையில் இருந்து விடுவித்து, அவர்களின் சுய நிர்ணய உரிமையை வழங்கவும், கிராமப்புற விவசாயப் பிரச்சினைகளை தீர்க்கவும் போராடுவதன் மூலமே அதைச் சாதிக்க முடியும்,

★ தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான ஆயுதப் படையணிகளை நிறுவு: முதலாளித்துவ நெருக்கடியின் உக்கிரமடைவுக்கு சமாந்தரமாக தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நசுக்க அரச–தனியார் குண்டர் படை அணிகளை ஈடுபடுத்துவது தீவிரம் அடைந்துள்ளது. ஆட்சிப்பீடத்தில் உள்ள யூ.என்.பி.காரர்களுக்கு மேலதிகமாக முதலாளித்துவ ஸ்ரீ.ல.சு. கட்சி குண்டர் படைகளை அமைத்து வருவதோடு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)யும் அத்தகைய ஒரு குண்டர் படையணியாக செயற்படும் இலக்குடன் செயல்பட்டு வருகின்றது. சிறப்பாக தோட்டத் தொழிலாளர்கள், அரச படை அணிகளும் யூ.என்.பி. – ஸ்ரீ.ல.சு.க. குண்டர் படைகளும் இனவாதத்தை தூண்டிவிட்டு நடாத்தும் கொலைகார கலவரங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக சுய பாதுகாப்புக்காக பாதுகாப்பு படையணிகளை நிறுவும் அவசியத்தை தோட்டத் தொழிலாளர்கள் அப்பட்டமாக தோற்றுவித்தனர். இரகசிய கொலைகார கும்பல்களதும் அரச படையணிகளதும் காடைத்தனங்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுத்த சமீபத்திய சம்பவம் தலவாக்கலை ஜாதிக சேவக சங்கத்தின் மாவட்டத் தலைவரான தேசையா அந்தரங்கமாக கொலை செய்யப்பட்டதாகும். இதனை எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் நடாத்திய பிரச்சாரத்தில் தலையிட்ட பொலிசார் ஐந்து தோட்டத் தொழிலாளர்களை கொலை செய்தனர்.

இச் சந்தர்ப்பத்தில் கூட தொண்டமான் வழக்கம் போலவே ''பக்கச் சார்பற்ற விசாரணை'' நடாத்தும்படியும் தோட்ட நிர்வாகிகளையும் பொலிஸ் அதிகாரிகளையும் இடமாற்றம் செய்யும்படியும் கொலைகார அரசாங்கத்தை வேண்டினார். ஸ்டாலினிச ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவரான பீ. இராமையாவின் கோரிக்கையும் இதுவே. தொழிலாளர்களின் பிரச்சாரம் உக்கிரம் கண்டதை தொடர்ந்து சமசமாஜ தலைவர் கொல்வின் ஆர்.டி சில்வா 1940 முல்லேரியா தோட்டத்தில் கோவிந்தன் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தின் மூலம் கிளர்ந்து எழுந்ததாக சொன்னார்.

அன்று தொழிலாளர்களின் சுயாதீனமான வர்க்க எதிர்த் தாக்குதலுக்கு அழைப்பு விடுத்த அவர் இன்று அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் சுயாதீனமான விசாரணை கமிட்டி'யை வேண்டி நின்றார்: முதலாளித்துவ அரசிடமும், சட்டத்திடமும், அரசாங்கத்திடமும் அடைக்கலம் கிடையாது என்பதை தோட்டத் தொழிலாளர்கள் நன்கு அறிவர். இந்த முதலாளித்துவ காடைத்தனங்களில் இருந்து தமது அமைப்புக்கள், அலுவலகங்கள், தலைவர்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் வசிப்பிடங்களை காக்க தொழிற்சங்கம் உள்ளடங்கலான தொழிலாளர் அமைப்புக்களை அணி திரட்டி அவற்றினால் பராமரிக்கப்படும் சுயாதீன பாதுகாப்பு அணிகளை நிறுவ வேண்டும்.

## 7. பேரவை மகாநாடு

அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், சகல தோட்டத் தொழிலாளருக்கும் குடியுரிமை வழங்குதல், 1948 பிரஜாவுரிமை சட்டம், 1964 சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம், 1987 இந்திய–இலங்கை உடன்படிக்கை உள்ளடங்கலான சகல ஒடுக்கு முறைச் சட்டங்களை அகற்றுதல் இந்திய–இலங்கை படைகளை வட–கீழ் மாகாணங்களில் இருந்து அகற்றுதல், தொழில்களையும் தொழிற் சங்கங்களையும் பாதுகாத்தல், சம்பள கோரிக்கை மற்றும் சேம நல சேவைகளை பெற்றுக் கொள்ளுதல், தொழிலாளர் பாதுகாப்பு படையணிகளை நிறுவுதல் முதலான கோரிக்கைகளின் அடிப்படையில் இ.தொ.கா.–சமசமாஜ–கம்யூனிச–நவ சமசமாஜ கட்சிகளையும் மற்றும் தொழிற் சங்கங்களையும் வேலை நிறுத்தம், உள்ளமர்வு போராட்டங்களை ஒழுங்கு செய்யும் படியும் தொழிற் சங்கங்களின் பேராளர் மகா நாட்டைக் கூட்டி அரசாங்கத்தின் தாக்குதலை தோற்கடிக்கும் பொது வேலை நிறுத்தத்தினை ஒழுங்கு செய்ய போராடுமாறும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

இந்தப் போராட்டங்களை ஒழுங்கு செய்ய முதலாளித்துவ அரசாங்கத்துடனும், முதலாளித்துவக் கட்சிகளுடனும் இ.தொ.கா.–சமசமாஜ–கம்யூனிச–நவ சமசமாஜ கட்சிகளின் தலைவர்கள் கொண்டுள்ள தொடர்புகளை துண்டிக்க வேண்டும் என தொழிலாளர்கள் கோர வேண்டும். யூ.என்.பி. அரசாங்கத்தினை வெளியேற்றி சோசலிச, ஜனநாயக வேலைத்திட்டங்களை அமுல் செய்யும் தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர இத் தலைவர்கள் போராட வேண்டும் என தொழிலாள வர்க்கம் கோர வேண்டும்.

அந்த விதத்தில் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான சக்தியை அணி திரட்டுவதன் மூலம் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளதும் சோவியத்துக்களை நிறுவவும் அவற்றின் மூலம் ஆயுதம் தாங்கிய தொழிலாளர் படைகளை வழிநடாத்தவும் தொழிலாளர் முன்வருதல் அவசியம். முதலாளித்துவ அரச படைகளையும் குண்டர் படைகளையும், கலைத்து தொழிலாளர் வர்க்கத்தின் கரங்களில் அரச அதிகாரத்தை கைப்பற்ற சோவியத் சபைகளை அமைத்து கிளர்ந்தெழ வேண்டும்.

## 8. புரட்சித்தலைமை

முதலாளித்துவ அரசாங்கத்தின் தாக்குதலின் முன்னிலையில் அடிபணியுமாறு வேண்டும் இத்தலைவர்களின் துரோக வேலைத்திட்டத்துக்கு எதிராக மேற்சொன்ன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடி, அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய புரட்சித் தலைமையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்ப முன்வருமபடி சகல தொழிலாளர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே பாட்டாளி வர்க்க அரச அதிகாரத்தை அமைப்பதன் மூலம் ஜனநாயக, சோஷலிச வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த போராடுகின்றது. முதலாளித்துவப் பிற்போக்கினை தோற்கடித்து, சோஷலிச புரட்சிக்கு முன் செல்ல தோட்ட, நகர்ப்புற, ஈழம் தொழிலாளர்களையும், ஈழம் விடுதலைப் போராளிகள், மற்றும் ஒடுக்கப்பட்டோரையும் அழைக்கும் ஒரே அமைப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

இந்த அமைப்பு, இலங்கை ஈழம் சோசலிச குடியரசினை நிறுவவும் அதனை உள்ளடக்கிய ஐக்கிய சோசலிச இந்தியத் துணைக் கண்ட குடியரசினை நிறுவுவதற்கான முன் நோக்கினையும் அடிப்படையாகக் கொண்டது. உலக சோசலிச புரட்சியின் மூலோபாயத்துக்காக போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்



படிப்பகம்

www.padippakam.com

குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கழகமும் இம் முன்நோக்குக்காகப் போராடி வருகின்றன.

## 10. சந்திரசேகரம்

இ. தொ. கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்கள் அம்பலமாவதைக் தொடர்ந்தும், தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்குப் போரர்டும் பெரும் அவசியம் உக்கிரம் காண்பதாலும் மாற்று தலைமை வழங்குவதாகக் காட்டியபடி தலவாக்கலை இ. தொ. கா. மாவட்ட அமைப்பாளர் பீ. சந்திரசேகரம் முன்தோன்றினார்.

தொண்டமான் தலைமையை கண்டனம் செய்த அவர் அரசியல் கைதிகளை, விடுதலை செய்யும் கோரிக்கைகளின் அடிப்படையில் 'பிரார்த்தனைக்கு' அழைப்பு விடுத்தார். இந்திய-இலங்கை உடன்படிக்கையை க்ண்டனம் செய்த சந்திரசேகரம் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவதை எதிர்த்து போராடுவதாகவும் 'சிறைகளை நிரப்புவதன் மூலம்' தொழிலாளர்கள் தமது தியாகத்தினை காட்டுவார்கள் எனவும் கூறினார். மே 1ம் திகதி தலவாக்கலை தங்ககலை தோட்ட மே தின கூட்டத்தில் அவர் தமது போராட்டத்தை பற்றி பின்வருமாறு கூறினார்:

''ஆரம்பத்தில் இருந்தே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யூ.என்.பிக்கு ஆதரவு வழங்கியது. ஆனால் நாம் வஞ்சிக்கப்பட்டோம். முன்னர் நாடு கடத்தப்பட்ட தொழிலாளர்கள் இந்திய வீதிகளில் பிச்சை எடுக்கிறார்கள்.

''சரியான தலைவர்களாய் இருந்தால் இந்திய-இலங்கை உடன்படிக்கையை நிராகரித்திருக்க வேண்டும். ஆனால் எமது கேவலம் தலைவர்கள் கரகோசம் செய்து ஆதரவு வழங்கினார்,

''3 இலட்சம் தொழிலாளர்கள் 3 மாதங்களுள் நாட்டிலிருந்து வெளியேற வேண்டும். இந்த ஒப்பந்தம், அதனுடன் சம்பந்தப்பட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஏற்படுத்தப்படவில்லை. எமது உரிமைகளை வென்றெடுக்க நாமே போராட வேண்டும்... அரசாங்கம் எமது மக்களை கொண்டு சிறைகளை நிரப்பினால் எமது இலக்கினை வெல்லும் வரை மேலும் மேலும் ஆட்கள் முன்னணிக்கு வருவார்கள்.''

இதிலிருந்து மூன்று கிழமைக்குப் பின்னர் தமது கண்டனத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சந்திரசேகரம் தொண்டமானுடன் ஒரே மேடையில் ஏறி, அவருக்கு வெள்ளைச் சுண்ணம் தடவுவதில் ஈடுபட்டதோடு, மாகாண சபை தேர்தலில் யூ.என்.பிக்கு வாக்களிக்கும்படியும் வேண்டினார்.

'போராட்ட' வசனங்களை உச்சரிப்பதை விட சந்திரசேகரத்தின் அரசியல் தொண்டமானின் அரசியலில் இருந்து வேறுபட்டது அல்ல. போராடும் அவசியத்துடன் முன்னணிக்கு வந்த இளைஞர்களும், தொழிலாளர்களும் அவரால் நடுத் தெருவில் கைவிடப்பட்டனர். தொண்டமானைப் போலவே சந்திரசேகரமும் தோட்டத் தொழிலாளர்களை 'தனிச் சிறப்பான' பக்கள் குழுவாக கணித்து அவர்களே அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள நேரிட்டுள்ளதாக தெரிவிக்கின்றார். 'இந்த தனிச்சிறப்புவாதத்தின்' அடிப்படையாக தோட்டத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களில் இருந்து கூறுபோட்டு சுரண்டலை தொடர்ந்து நடாத்துவதற்காக காலனித்துவ ஆட்சியாளர்கள் அவர்களின் கையாட்களான இலங்கை முதலாளித்துவத்துடன் அமுல் செய்த வேலைத் திட்டம் விளங்கியது; இ.தொ.கா-கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆரம்பத்தில் இருந்தும் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் 1960ம் ஆண்டுகளில் இருந்தும் முதலாளி வர்க்கத்தின் இந்த பிரித்தாளும் சுரண்டல் வேலைத் திட்டத்துக்கு அடிபணிந்து, தோட்டத் தொழிலாளர்களுக்கு வேறான 'தீர்வு'களை முன் வைத்தனர்.

'தனிச்சிறப்பான பாதை' பற்றிய இந்த அரசியல், தோட்டத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களில் இருந்து அன்னியப்படுத்தவும் பிளவுபடுத்தவும், முதலாளித்துவ தாக்குதலுக்கு முழு தொழிலாள வர்க்கத்தையும் பலிகடாவாக்கவும் இடமளித்தது.

தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்துக்கும், வர்க்க சுயாதீனத்தை ஊர்ஜிதம் செய்யவும், முதலாளித்துவத்தை தூக்கி வீசி சோசலிச சொத்து முறையை ஸ்தாபிதம் செய்யவும் போராடும் தலைமையினால் மட்டுமே தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்வழியை காட்ட முடியும் என்பதை சந்திரசேகரத்தின் காட்டிக் கொடுப்பு சுட்டிக் காட்டியது. தோட்டத் துறையில் இத்தகைய தொழிற்சங்கவாத மத்தியவாத வேடதாரி தலைமைகள் தோன்றலாம். அவர்கள் 'தனிச்சிறப்பு' 'குறுக்கு வழி'கள் இருப்பதாகக் கூறி தொழிலாள வர்க்கம் புரட்சிகர வேலைத்திட்டத்தில் ஈடுபடுவதை தவிர்க்க தொழிற்படலாம் என்பதை நாம் தொழிலாளர்களுக்கு கூறி வைக்கின்றோம்.

## 11. ஈரோஸ்

தோட்டத் தொழிலாளர்களை தமிழ் தேசிய வாதத்துடன் பிணைத்துப்போட கடந்த சில வருடங்களாக தமிழ்குட்டி முதலாளித்துவ தேசியவாத ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்கள் முயன்று வருகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் தமிழ் தேசிய இனத்தின் 'பிரிக்க முடியாத பாகம்' எனவும் வட-கீழ் மாகாண தமிழ் தாயகத்தினை கொண்ட ஈழம் அரசில் தோட்டத்துறையும் தோட்டத் தொழிலாளர்களும் அடங்குவர், எனவும் இவ்விரு இயக்கங்களும் கூறிக் கொள்கின்றன. தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையை ஏற்க வேண்டும் எனவும் இவை கூறின. இந் நிலைப்பாடு படு பிற்போக்கான தொழிற்பாட்டினை வகிக்கிறது.


இவ்விரு இயக்கங்களதும் தலைவர்கள் இன்று இந்திய-இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு காந்தி-ஜயவர்தன அரசாங்கங்களின் ஜனநாயக செயற்பாடு எனப்படுவதற்கு துவக்குமுனையில் இட்டுச் செல்கின்றனர். ஈ.பீ.ஆர்.எல்.எவ். தலைவர்கள் இந்திய இராணுவத்துடன் இணைந்து தமிழ் விடுதலை இயக்கத்தின் போராளிகளை நசுக்கவும் கூட செயற்படுகின்றனர். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைவர்கள் என இவர்களால் சிறிது காலத்துக்கு முன்னர் அழைக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இவர்களால் முழுமனதாக அங்கீகரிக்கப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் நாடுகடத்தப்படுகின்றார்கள்!

''எமது இயக்கத்தைப் பொறுத்தளவில் மலையக மக்களைக் குறித்து மிகத்தெளிவான நிலைப்பாடு உண்டு. 1970களில் தமிழ்த் தேசிய வாதம் கூர்மை பெற்றபோது அது மலையக மக்களைக் கணக்கிலெடுக்காத தன்மையை நிராகரித்து, இம்மலையக மக்களின் விடிவிலே தான் ஈழம் விடியுமென உறுதியாகக் கூறியது ஈரோஸ். ஏனையோரைப் போல மலையக மக்கள் அங்கும் வாழலாம். சிங்களவர்களோடு சேர்ந்தும் போராடலாம். வடக்கு-கிழக்கிலும் வந்து குடியேறலாம். அல்லது இந்தியாவுக்கு போனாலும் போகலாம் என சகட்டுமேனிக்கு கூற ஈரோஸ் தயாராக இல்லை. அவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வளப்படுத்திய மண் அவர்களுக்கு உரியது. அதனை அவர்கள் காக்க முன்னெடுக்கும் போராட்டமே ஈழப் போராட்டமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



தோட்டத் தொழிலாளர்களின் மாபெரும் கூட்டம்

அவர்கள் வாழும் நிலப்பகுதிகளும் அடங்கியதே ஈழம் ஆகும். இதற்காகப் புவியியல், அரசியல் வரலாறு ஆராயப்பட்டு வடக்கும் கிழக்கும், மலையகப் பகுதியும் உள்ளடக்கிய ஈழம் என்ற அரசியல் வரையறையை முன் வைத்துள்ளோம். இம்மக்கள் ஈரோசுடன் இணைந்து அரசியல் விழிப்படைந்து, ஈழம் போராட்டம் தமது விடுதலையை உள்ளடக்கியதொன்றென புரிந்து கொண்டு செயற்படுகின்றார்கள்'' (மீட்போலை சஞ்சிகை — பாலகுமார்)

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்களின் நிலைப்பாடும் இதுதான்.

இந்த அறிக்கையைத் தூக்கிப் பிடித்த வண்ணம் நவ சம சமாஜ, அரசாங்க லிகிதர் சேவைச் சங்க, இலங்கை ஆசிரியர் சங்க மத்தியவாத தலைவர்கள் இந்தகுட்டி முதலாளித்துவ தேசிய வாத தலைவர்களை மார்க்சிஸ்டுகள், இடதுசாரிகள், தொழிலாளி வர்க்கம் பக்கம் திரும்பியோர் என்றெல்லாம் முகமூடி சூட்டினர்.

தோட்டத் தொழிலாளர்கள், உலக தொழிலாள வர்க்கத்தின் இலங்கைப் படையணியின் 'பிரிக்க முடியாத பாகமாகும்'. தென் இந்திய தமிழ் மக்களிலிருந்து பலாத்காரமாக கொணர்ந்து தோட்டப் பகுதியில் இருத்தி, இனவாத அடிப்படையில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட அவர்கள் சுரண்டலுக்கு பலியாகி வருகின்றார்கள். இவர்களுக்கு எதிரான சிங்கள முதலாளித்துவத்தின் இனவாத தூண்டுதல்கள், இவர்களை நகர்புற தொழிலாள வர்க்கத்திலிருந்து கூறுபோட்டு, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை கட்டிக்காப்பதற்குச் செய்யும் பிற்போக்கு வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகும்.

## 12. 'தொழிலாள வர்க்க தேசியவாதம்'

ஈ.பி.ஆர்.எல்.எவ்.-ஈரோஸ் தலைவர்கள் கூறுவதுபோல் இத்தொழிலாள வர்க்கத்துக்கு அவசியப்படுவது 'தேசி உரிமைகளை' பெற்றுக் கொண்டு வேறோர் முதலாளித்துவ வர்க்கத்தின் கீழ் சுரண்டலுக்கு உள்ளமர்வதோ அல்லது 'பயிர் நில உரிமையை' பெற்றுக்கொண்ட விவசாயிகளாக மாறும் தலைவிதியோ அன்று. பெருந்தோட்டக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள இத் தொழிலாளர்கள் விவசாயிகளாக மாறுவது எப்படி? உற்பத்தி சக்திகளின் உயர் அபிவிருத்தியுடன் தொடர்புகொண்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் நில உரிமையை பெற்ற விவசாயிகளாக அந்த உற்பத்தி சக்திகளை இயக்க முடியாது. தமிழ்குட்டி முதலாளித்துவ தலைவர்களின் யோசனையின் சாராம்சத்தின்படி உற்பத்தி சக்திகளை கைவிட்டு விட்டு புராதன நிலைமைககு செல்லவேண்டும்; இல்லையேல் வேறு முதலாளி வர்க்கத்தின் கீழ் சுரண்டலுக்கு பலியாகும் பொருட்டு இன்று சிங்கள முதலாளிகளின் கீழ் நிலவும் ஒடுக்கு முறையில் இருந்த 'விடுதலை' பெற வேண்டும்!

வெறும் தேசியவாதத்தின் மூலம் இலங்கை–இந்திய முதலாளித்துவ அரசாங்கங்கள் தொடுத்த தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாது போனதை தொடர்ந்து இக்குட்டி முதலாளித்துவ தமிழ் இயக்கங்கள் தமது தேசியவாதத்தின் ஆயுதமாகத் தோட்டத் தொழிலாளர்களை பயன்படுத்தும் பொருட்டு 'தொழிலாள வர்க்க தேசியவாதத்தை' முன் வைத்தனர்.

தொழிலாள வர்க்கத்தை தேசிய விடுதலை இயக்கத்துள் சிறைப்படுத்தி வைக்க எடுக்கும் முயற்சி பிற்போக்கானது. தொழிலாள வர்க்கத்துக்கு நாடு கிடையாது. தொழிலாள வர்க்கம் அனைத்துலக ரீதியானது: உலகப் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ள நிலைமையினால் ஏகாதிபத்தியம் அதனை தேசிய எல்லைகளுள் பிரித்து வைத்துள்ளது. எனினும் அந்த தேசிய எல்லைகளினுள் உள்ள தொழிலாளர்கள் உலகப் படையணியின் ஒரு பாகமாவர்; முதலாளித்துவமும் அதன் தேசிய ஏஜன்டுகளும் தொழிலாள வர்க்கத்தை தேசிய எல்லைகள் மூலமும் இன, மத வேறுபாடுகள் மூலமும் பிரித்தாள செயற்பட்ட போதிலும் மார்க்சிஸ்டுகள் அதற்கு எதிராகச் சகல நாடுகளிலும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் பூரண ஜனநாயகத்துக்காக முன் நின்று வருகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தின் உள்ளே தேசிய வாதத்தின் அளுத்தங்களைப்பற்றி மார்க்ஸ் எங்கேல்சை மேற்கோள் காட்டி லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''பாரிஸ் தொழிலாளர்களுள் ஒரு பகுதியினரிடையே ஊடுருவிய 'தேசியவாத கண்ணோட்டம்' (1792 பாரம்பரியங்கள்) மார்க்சும் எல்கேல்சும் குறிப்பிட்ட குட்டி முதலாளித்துவ பலவீனமாகுவதோடு அது பாரிஸ் கம்யூனின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த ஒரு காரணமாகியது'' (சோசலிசமும் யுத்தமும் — திரட்டிய நூல் தொகுதி–21 பக்கம்–313) இன்று தேசிய வாதம் பலவீனமன்றி பிற்போக்காகும் என லெனின் மேலும் குறிப்பிட்டார்.

ஈரோஸ் – ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்களின் சூத்திரம், தொழிலாள வர்க்கம், முகம் கொடுத்துள்ள நிச பாத்திரத்தினை பூசி மெழுகுவதாகும். தோட்டத் தொழிலாளர்களிடையே நுழைக்க முயலும் 'தேசியவாதம்' அவர்களை சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கத்திடம் இருந்து பிளவு படுத்தும் முதலாளித்துவ வர்க்கத்தின் அவசியத்துடன் ஒத்துப் போகின்றது. அது சிங்களம் பேசும்



படிப்பகம்

www.padippakam.com

**தொழிலாளர்களிடையே தமிழர் எதிர்ப்பு இனவாதத்தினை நுழைக்கும் முதலாளித்துவ பிற்போக்கு முயற்சியுடன் இணைந்த வகையில் தொழிலாள வர்க்க அனைத்துலக ஐக்கியத்தை கட்டி எழுப்புவதற்கு எதிரான மரண அடியாகும்.**

தோட்டத் தொழிலாளர்கள், காலனித்துவ ஆட்சியில் இருந்து வந்ததும், சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தினால் விஷமூட்டப்பட்டதுமான இனவாத வேறுபாடுகளின் அடிப்படையில் திணிக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறை தொடர்களை சிதறடித்து, '[illegible] விடுதலை' அடையும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்கள்: அது முதலாளித்துவ அரசினை தூக்கி வீசி, முதலாளித்துவ சொத்து உரிமையை ஒழித்து, தொழிலாள வர்க்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொணர்ந்து அவற்றை சோசலிச முறையில் ஒழுங்கு படுத்துவதுடன் இணைந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்கள், அப்பணியினை இலங்கையின் ஏனைய தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து அனைத்துலக தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியம் பூணுவதன் மூலமே இட்டு நிரப்ப முடியும். இந்தச் சோசலிசப் புரட்சியின் முக்கிய சக்தி என்ற முறையில் தொழிலாள வர்க்கம் தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஒடுக்குமுறையை ஒழித்து அதன் தேசிய ஜனநாயக உரிமைகளை வழங்க முடியும். எமது சகாப்தத்தின் இயக்கவியல் இதுவே.

தோட்டத் தொழிலாளர்களே! நகர்ப்புற தொழிலாளர்களே! சமசமாஜ – கம்யூனிச – இ.தொ.கா. தலைவர்களின் காட்டிக் கொடுப்புகளை முறியடித்து, வர்க்க தோழமையுடன் பிணைக்கப்பட்டுள்ள முதலாளித்துவ எதிர்ப்புரட்சி திட்டங்களை தோற்கடிக்கும் பொருட்டு சோசலிச புரட்சியின் பதாகையின் கீழ் ஒரே அனைத்துலகவாத நீரோட்டமாக முன்நோக்கி வருக!

**தொழிலாள வர்க்கம் 1942—1951 வரை நான்காம் அகிலத்தின் இலங்கையான போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் ட்ரொட்ஸ்கிவாத தலைமையின் கீழ் ஒரே அனைத்துலகவாத நீரோட்டமாக முன்நோக்கிற்று. 1939ம் ஆண்டுகளின் கடைப்பகுதியில் இருந்து 1960ம் ஆண்டுகளின் முற்பகுதி வரையும் லங்கா சமசமாஜக்** கட்சி வரையறைகளுடன் கூடிய சில தொழிலாள வர்க்க அடிப்படைக் கொள்கைகளுக்காக முன் நின்றது: அதன் மூலம் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான சக்தி வாய்ந்த தலைமையாக விளங்க தொழிலாள வர்க்கத்தினால் முடிந்தது. இன்று இந்த வரலாற்று நிலைப்பாட்டை மீண்டும் கைவரப் பெற்றும், அதையும் தாண்டி ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டம், அமைப்பினால் ஆயுதபாணியாகுவதே தொழிலாள வர்க்கத்துக்கு உள்ள ஒரே மார்க்கமாகும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுக்கும் இலங்கை முதலாளித்துவ கைக் கூலிகளுக்கும் எதிராக அபிவிருத்தி செய்யப்பட்ட போராட்டத்தின் பெரிதும் முக்கியமான இடத்தினை தோட்டத் தொழிலாள வர்க்கம் வகித்தது.

இலங்கையின் காலனித்துவ பொருளாதாரத்தின் முக்கிய துறையான தேயிலை-இறப்பர் தோட்டங்களில் மிகை உச்ச சுரண்டலை தொடரும் பொருட்டு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தென் இந்தியாவில் இருந்து பலாத்காரமான முறையில் கொணர்ந்த ஏழைகளை தோட்டத்துறையில் சிறை வைத்தனர். இது தென் ஆபிரிக்காவில் பிரித்தானிய காலனித்துவவாதிகள் நடைமுறைப்படுத்திய கறுப்பு தொழிலாளர்களை 'தனிமைப் படுத்தி வைக்கும்' வேலைத்திட்டத்தின் இலங்கை வடிவமாகும். இத்தொழிலாளர்களின் உரித்தாளர்கள் பிரித்தானிய காலனித்து ஆட்சியாளர்கள். தொழிலாளர்களின் மேல் 'கங்காணி' என்ற கொந்தராத்து முறையை ஏற்படுத்தி, குறைந்த **சம்பளத்துக்கு சுரண்டுவது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 1931ம் ஆண்டு வரையிலான** சுமார் ஒரு நூற்றாண்டு காலம் அவர்களுக்கு ஜீவனைப் பிடித்து வைக்கும் விதத்தில் ஆண் தொழிலாளிக்கு 33 சதமும் பெண் தொழிலாளிக்கு 25 சதமும் சிறுவர்களுக்கு 12 சதமும் சம்பளமாக வழங்கப்பட்டன. அவர்கள் படிப்பறிவற்றவர்கள் ஆக்கப்பட்டனர். ஒரு தோட்டத்தில் இருந்து மறு தோட்டத்துக்கு செல்வதை தடை செய்யும் தடைச் சட்டம் அமுலில் இருந்தது. அரசினதும் தோட்டச் சொந்தக்காரர்களதும் அட்டூழியங்களுக்கு இத்தொழிலாளர்கள் இடைவிடாது பலியாகி வந்தனர். முதலாளித்துவத்தின் உள்ளே உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதற்கு நிலவிய பேரளவிலான 'சுதந்திரத்தை' காலனித்துவ ஆட்சியாளர்கள் இத்தொழிலாளர்களிடம் இருந்து பறித்தனர். அவர்களுக்கு தொழிற் சங்க உரிமையும் வழங்கப்படவில்லை.

இந்தக் கொடிய அடிமை முறை ஆட்சியின் மறு இலக்கு, நகர்ப்புறத் தொழிலாளர்கள் ஐக்கியப்படுவதை நனவான முறையில் தவிர்ப்பதே.

## 13. டொனமூர் ஆணைக்குழு

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் பெரும்பான்மையினரான இந்தத் தொழிலாளர்களுக்கு எதிராக 1920ம் ஆண்டுகளிலேயே அவர்களுக்கு அரசியல் உரிமைகளை மறுக்கும் பொருட்டு சிங்கள முதலாளி வர்க்கம் சிங்கள பேரினவாதத்தை கட்டவிழ்க்கத் தொடங்கிற்று. 1928ல் டொனமூர் ஆணைக்குழு அரசியல் அமைப்பு சீர்திருத்தங்களை சிபார்சு செய்யும் பொருட்டு இலங்கைக்கு வந்த சமயம், தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்குவதற்கு எதிராக இந்த முதலாளிகள் பிரச்சாரம் செய்தனர். ஏகாதிபத்திய கைக்கூலி டீ. எஸ். சேனநாயக அன்று கூறியது இதுதான்: ''சிங்களவர்களை தவிர ஏனையோருக்கு சலுகைகள் வழங்கும் பொருட்டு தம்மை தண்டனைக்கு உள்ளாக்க சம்மதம் தெரிவித்த வேறு மக்கள் இருப்பார்கள் என நான் நினைக்கவில்லை... இந்தியர்களுக்கு பெரும் நாடு உண்டு. எமக்கு உள்ளதோ இந்த குட்டி நிலத்துண்டு மட்டுமே... எமக்கு இந்நாடு வேண்டும்'' ('ஹன்சார்ட்'—1928 நவம்பர் 8)

பிற்காலத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் காலடிகளை வருடுபவராக மாறிய ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையில் அன்று தொழிலாளர் வர்க்கம் இந்த இனவாத பிரச்சாரத்தை எதிர்த்து கிளர்ந்தது:

''வம்சத்தினர் சிலர் இந்தியர்கள் சிங்கள உழைக்கும் மககளுக்கு ஒரு தொற்றுநோய் என்கின்றனர். இந்த நிச தேச பக்தர்கள் அவர்களின் உழைக்கும் மக்களின் கஷ்டமான, தொந்தரவுகள் மிக்க காலங்களில் செய்தது என்ன? தமது ஏழை மக்களுக்கு உதவுவதற்குப் பதிலாக இந்த வம்சத்தினர் ஏழை கிராம வாசிகளை அவர்களின் விவசாய நிலங்களில் இருந்து கலைக்க தமது பலத்தைப் பாவித்தனர். இப்போது இவர்கள் தேசபக்த கருத்துக்களை வளர்த்துக் கொண்டுள்ளனர். இதற்கு காரணம் என்ன? அது ஏழை மக்களுக்கு வாக்குகள் கிடைப்பதன் பெறுபேறாகும். விசேட ஆணைக்குழுவின் முன்னால் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதை எதிர்த்தவர்களும் இந்த நிலவுடமையாளர்களே. அவர்களின் சூத்திரங்கள் பிழைத்ததால் இன்று அவர்கள் இலங்கையில் உள்ள இந்தியர்களின் வாக்குரிமையை ஒழிக்கும்படி பேசி வருகின்றனர்கள்'' (1928ல் தொழிலாளர் கூட்டமொன்றில் ஏ. ஈ. குணசிங்க நிகழ்த்திய பேச்சு. மேற்கோள் 'எத்னிக் அண்ட் க்ளாஸ் கொன்பிளிக்ட் இன் சிலோன் – குமாரி ஜயவர்தன)

## 14. சமசமாஜக் கட்சியின் ஆரம்பம்

1930பதுகளில் உலக



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதார வீழ்ச்சி வளர்ச்சி கண்டதைத் தொடர்ந்து அடிப்படை ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க தொழிலாள வர்க்கம் போர்க்குணம் பூண்டு எழுச்சியுற்றது. அச்சமயத்தில் சமசமாஜ கட்சி ஆரம்பிக்கப்பட்டதோடு அங்கு ட்ரொட்கிச போக்குகள் வளர்ச்சி கண்டன. இந்த வளர்ச்சியால் காலனித்துவவாதிகளுக்கும், அவர்களுக்கு அடிபணிந்த முதலாளிகளுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தின் சக்தி மிக்க போராட்டத்தைத் தொடுப்பதற்கான நிலைமைகள் உருவாகின.

சமசமாஜக் கட்சியினதும், போல்ஷெவிக் லெனினிஸ்ட் கட்சியினதும் போராட்டத்தின் நடுமையமாக தோட்டத் தொழிலாளர்களை 'தனிமைப் படுத்தி' அவர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டுவதை சிதறடித்து தொழிலாள வர்க்க ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்வது விளங்கிற்று. தொழிலாள வர்க்கம் தேசிய சுதந்திரத்துக்கான போராட்டத்தின் தலைமையை வகித்தது.

பிரித்தானிய காலனித்துவ வாதிகளிடம் இருந்து சுதந்திரத்தை வெற்றி கொள்ளும் போராட்டத்துக்கும், ஏகாதிபத்திய சொத்து உடமையையும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின் சொத்து உடமையையும் துடைத்துக்கட்டும் சமூக விடுதலைக்கான போராட்டத்துக்கும் இடையே வரலாற்று உறவினை நிலைநாட்டும் நிரந்தரப் புரட்சி வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கம் போல்ஷிவிக் – லெனினிஸ்ட் கட்சியால் ஆயுதபாணியாக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் 1940பதுகளில் வளர்ச்சி கண்ட தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தில் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தின் நடுமையமாக விளங்கிய தோட்டத்துறைப் போராட்டம் மிகவும் தீர்க்கமானதாக விளங்கிற்று

ஏகாதிபத்திய யுத்தத்தின் தோற்றத்துடன் இப் போராட்டம் நன்கு முன்னேற்றமான பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் நிலைப்பாட்டில் செய்யப்பட்ட போராட்டமாகியது. சோவியத் நாட்டின் ஸ்டாலினிச அதிகாரத்துவம் 'ஜனநாயக ஏகாதிபத்தியவாதிகளுக்கு' ஆதரவளிக்கும் பிற்போக்கு வேலைத் திட்டத்தை முன் வைத்தனர். இதன் இலக்கு, ஏகாதிபத்தியத்துடன் 'சமாதான சகவாழ்வு' நடாத்த அனைத்து நாடுகளிலும் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை குழி தோண்டிப் புதைப்பதன் மூலம், ஏகாதிபத்திய யுத்தத்துடன் கட்டிப் போடுவதே. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களையும், காலனித்துவ அரைக் காலனித்துவ நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்களுடன் தொழிலாள வர்க்கப் போராட்டங்களையும் 'பாஷிசத்துக்கு எதிரான போராட்டம்' என்ற சூத்திரத்தின் கீழ் அனைத்துலக ரீதியில் காட்டிக் கொடுக்க ஸ்டாலினிசம் முன் வந்தது. இலங்கையில் ஸ்டாலினிச ஏஜன்டுகள் 'ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி' (இன்றைய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி) என்ற பேரில் சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறி இந்த எதிர்ப்புரட்சி வேலைத்திட்டத்தை முன் வைத்தனர். ஸ்டாலினிஸ்டுகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை சகல போராட்டங்களையும் நிறுத்தி ஏகாதிபத்திய யுத்தத்தின் போர்வீரர்களாக சேருமாறும், யுத்தத்தை நடாத்த உற்பத்தியை விரைவுபடுத்துமாறும் ஆலோசனை கூறினர். ரூஷ்யாவில் 1917 அக்டோபர் சோசலிச புரட்சிக்கு தலைமை தாங்கிய போல்ஷிவிக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களை 1936–1938 மாஸ்கோ பொய் வழக்குகளின் மூலம் படுகொலை செய்து. இதன் மூலம் உலக சோசலிசப் புரட்சியின் மூலோபாயத்தினை முன்னெடுத்துச் சென்ற நான்காம் அகிலத்துக்கு தாக்குதல் தொடுத்த சோவியத் அதிகாரத்துவம் கட்டவிழ்த்த எதிர்ப்புரட்சி வேலைத்திட்டத்தின் பங்காளர்களாக இலங்கையில் ஸ்டாலினிஸ்டுகள் செயற்பட்டனர்.

ஸ்டாலினிச துரோகத்துக்கு அடி கொடுத்தும், ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எந்தவிதமான ஆதரவும் வழங்காமலும் காலனித்துவ ஆட்சியாளர்களை துரத்தியடிக்க பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்டுவது சமசமாஜக் கட்சியினதும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினதும் வேலைத்திட்டமாக விளங்கிற்று. இந்த அடிப்படையில் தோட்ட, நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து புரட்சிகரப் போராட்டங்களுக்கு கிளர்ந்ததும். டீ.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர் ஜயவர்தன, எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க முதலான இலங்கையின் முதலாளித்துவத் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் பாதணிகளை நக்கி மேலும் மேலும் நெருங்கி இணைந்தனர். தேசிய சுதந்திரத்துக்கான போராட்டத்தினை தம் கைக்குள் கொணர்ந்த இலங்கைத் தொழிலாள வர்க்கம் தேசிய முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பும் இனவாதமும், வங்குரோத்தும், நிறைந்த பிற்போக்கு தன்மையை அம்பலப்படுத்துவதில் வெற்றி கண்டனர்.

தோட்டத் தொழிலாளர்களை இந்தப் புரட்சிகரப் போராட்டங்களுக்கு அழைப்பதை, சமசமாஜ தலைமையிலான ஐக்கிய இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆரம்பித்து வைத்தது.

## 15. முல்லோயா வேலைநிறுத்தம்

1940 ஜனவரியில் முல்லோயா தோட்டத்தில் தொடங்கி மே மாதம் வரை தோட்டத்துறை பூராவும் படர்ந்த இப் பிரமாண்டமான போராட்டம் அனைத்துலக முக்கியத்துவத்தை பெற்றுக் கொண்டது. முல்லோயா தோட்டத்தில் கோவிந்தனை சுட்டதன் மூலம் இரத்தம் சிந்தும் ஒடுக்குமுறை தொடுக்கப்பட்டது. தொழிலாள வர்க்கம் காலனித்துவத்துவ, காலனிச் சார்பான முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தை இத்தகைய இரத்தத்தால் பொறிக்கப்பட்ட வரலாற்றுப் போராட்டத் தியாகங்கள் மூலம் முன்னெடுத்தது. தோட்டத் தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டம், இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்கு மட்டுமன்றி இந்தியாவினுள் பெருக்கெடுத்து வந்த அதன் காலனித்துவ ஆட்சி முறைக்கும் எதிரான பாட்டாளி வர்க்க புரட்சிகரப் போராட்டங்களுக்கும் வழி வகுக்கும் என்ற அச்சம் ஏகாதிபத்தியவாதிகளை ஆட்டிப் படைத்தது. சமசமாஜ தலைவர்களினால் முழு அளவிலான தலைமையை வழங்க முடியாது போயினும் வேவலஸ தொழிலாளர்கள் 'தொழிலாளர் கவுன்சிலை' நிறுவி நிர்வாகத்தை தமது கைகளுக்குள் கொணர்வதற்கான ஆரம்பத்தினை கூட பிரத்தியட்சமாக்கினர், 1940 வசந்த காலத்தில் சமசமாஜ கட்சி சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் வெளியிட்ட புரட்சிகர துண்டுப் பிரசுரம் பின்வரும போராட்ட சுலோகங்களைக் கொண்டிருந்தது;

''(அ) சங்கத்தின் உதவியுடன் சகலரும் ஒன்றிணைந்து வேலை நிறுத்தம் செய்தால் கொடிய சுரண்டல் நிர்வாகிகளின் சுவாசத்தை நிற்க வைக்கலாம்.

(ஆ) தோட்டத் தொழிலாளர்களால் வெள்ளைக்கார தோட்ட நிர்வாகிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தம் இன்று ஏகாதிபத்திய அமைப்புக்கு எதிரான பலம் வாய்ந்த போராட்டமாகி உள்ளது.

(இ) தோழர்களே, நாம் ஐக்கியப்பட்டு போராடி, வெ



படிப்பகம்

www.padippakam.com

பதாகையை உயர்த்தினுல் சகல சுரண்டல்களும் இன்றே ஒழிக்கப்படும்;

(ஈ) சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள புரட்சி அவசியப்படுகின்றது.

(உ) இன்று பிரித்தானியர்களின் நிச யுத்தம் இலங்கையினுள் இடம் பெறுகின்றது; அவர்களைப் பொறுத்தமட்டில் ஓரளவிலேனும் வெற்றி பெறக் கூடியதாய் எஞ்சியுள்ள யுத்த களம் நிராயுதபாணிகளான தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக யுத்தம் நடாத்தும் தோட்டத்துறையேயாகும்.

(ஊ) உலகத் தொழிலாளர்களே! ஐக்கியப்படுங்கள் பொலிஸ் ஒடுக்கு முறைகள் ஒழிக! புரட்சி பரவட்டும்!

(எ) காலனித்துவ மக்கள் மீது இந்த அதிகாரத்துக்கு நாம் ஆதரவு அளிக்கக் கூடாது. இந்த அமைப்பினை தூக்கி வீச நாம் தொழிற்பட வேண்டும். நாம் போராட வேண்டியது போட்டியிட்டுக் கொண்டுள்ள வல்லரசுகளின் வீழ்ச்சியினுல் ஏற்படவேண்டிய எமது சுதந்திர தினத்தை தோற்றுவிக்கவே. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஆதரவு வழங்காதே!'' ('ஓரிஜின்ஸ் ஒப் ட்ரொட்ஸ்கிசம் இன் சிலோன்' – லஸ்ஸி–பக்கம் 233)

இந்தப் புரட்சிகரப் போராட்டத்தினை நசுக்கும் பொருட்டு காலனித்துவவாதிகள் சமசமாஜ கட்சியை தடை செய்தனர். ஒடுக்குமுறை இயந்திரத்தில் இருந்து தப்பி இந்தியாவுக்கு ஓடிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போராட்டத்தினை உச்சக் கட்டத்திற்கு கொணர்ந்து, இந்திய – போல்ஷிவிக் – லெனினிஸ்ட் கட்சியை நிறுவினர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய 'தீர்வின்' அடிப்படையில் 1948ல் ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை முதலாளிகளின் கைக்கு ஆட்சியை மாற்றச் சதி செய்தனர். இந்த சதிக்கூட்டு பின்னணியாக உலக தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்கள், தேசிய விடுதலைப் போராட்டங்கள் அதன் பாகமாக இலங்கை தொழிலாள வர்க்கம் ஏழை விவசாயிகளை ஈர்த்த வண்ணம் நடாத்திய புரட்சிகரப் போராட்டங்கள் பற்றிய பீதி விழங்கிற்று; காலனித்துவ காலத்தில் இருந்து தொழிலாள வர்க்கம் சம்பந்தமாக நிலவிய பீதியினுல் இலங்கை முதலாளி வர்க்கம் காலனித்துவ ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சதி மூலம் இனவாத அடிப்படையில் 'ஐக்கிய முதலாளித்துவ அரசினை' திணித்தனர். இலங்கையின் முன்னேற்றமான தொழிலாளர்கள் போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் இந்த பொய் 'சுதந்திரத்தை' கண்டித்து ஆர்ப்பாட்டம் நடாத்தி, ஏகாதிபத்திய பிடியையும் முதலாளித்துவ வர்க்க ஆட்சியையும் ஒழித்துக்கட்டி ஜனநாயக உறவுகளை ஏற்படுத்தும் சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேற சபதம் பூண்டனர்.

இப்போராட்டத்தின் மிகவும் முக்கியமானதும், தீர்க்கமானதுமான நடவடிக்கை, ஐக்கிய அரசின் இனவாத அடிப்படையில் 1948 ஆகஸ்டில் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை அகற்றி, நகர்ப்புற, தோட்டத் தொழிலாளர்களை இனவாத அடிப்படையில் கூறுபோட்டு முதலாளித்துவ வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்த மேற்கொண்ட தந்திரத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் நடாத்திய போராட்டமாகும்.

இன்று அந்த நிலைப்பாட்டுக்கு எதிராக சிங்கள சோவினிசத்தின் அப்புகாத்தாக விளங்கும் கொல்வின் ஆர். டி. சில்வா அன்று தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை அகற்றும் இனவாத தாக்குதல், சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்ற தொழிலாள வர்க்க

ர்சபான பகுதியினுடைய தேசியவாதத்தின் அழுத்தங்க

மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என சுட்டிக் காட்டினுர்; இனவாத அடிப்படையில் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு தாக்குதல் நடாத்துவதன் மூலம் இலங்கை முதலாளித்துவ அரசு பாசிச இலட்சணங்களை கொண்டுள்ள நிலையை எட்டியுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினுர்;

''இந்த அரசாங்கம், நனவற்ற முறையில் செயல்படுத்துகின்ற அடிப்படைத் தத்துவார்த்த அரசியலோ அல்லது சமூக விஞ்ஞான கோட்பாடோ என்னவெனில் அரசு தேசியத்துடனும், தேசியம் இனத்துடனும் சமமாக வேண்டும் என்பதே. பரம்பரையை, குடியுரிமையை தீர்மானம் செய்யும் முக்கிய கோட்பாடாக்கும் வேறு அர்த்தம் அல்லது சித்தாந்தம் இருக்க முடியாது; இது காலவதியான கருத்தாகும். நவீன அரசின் வர்க்கத் தன்மை என்னவாக இருந்த போதிலும் நாம் எண்ணற்ற உதாரணங்களின் மூலம் காண்பதுபோல் அது அரசு தேசியத்துடன் சமத்துவமாவது தமது இலக்கினை ஸ்தாபித்துக் கொள்ள அவசியமாக விளங்கிய பழைய பாரம்பரிய தேசிய அரசு அன்று. இந்த காலவதியான கோட்பாடு பிற்போக்குக்கு சேவை செய்யும் இலக்குடன் புதை குழியில் இழுத்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ அமைப்பு பொறிந்து போகும் இன்றைய காலகட்டத்தில் ஆகும். தேசியத்தினை இனத்துடன் சமப்படுத்த முயல்வோரும் அரசின்—தீர்மானம் செய்கையில் தீர்க்கமான சாதனமாக இனத்தினை ஆக்குவோரும் பாசிசத்தின் கீழேயேயாகும்.''

பெறுமதியை உற்பத்தி செய்யும் தொழிலாள வர்க்கம் எந்தவொரு நாட்டிலும் பிரஜையாக விளங்கும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டிய வர்க்கமாகும் என அவர் குறிப்பிட்டார், இப் போராட்டமானது, சிங்கள தேசிய வெறியினதும் முதலாளித்துவ

களையும் தொழிலாள வர்க்கத்தினுள் திணிப்பதற்கு எதிராக பாரம்பரிய மார்க்சிச நிலைப்பாட்டின் அடிப்படையில் செய்த போராட்டமாகும். இது ஐக்கிய சோசலிச இந்திய துணைக்கண்ட சோவியத் குடியரசு சம்பந்தமான அனைத்துலக தொழிலாள வர்க்க முன்னோக்கினை அடிப்படையாகக் கொண்டது.

போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பின்னர் அந்த முன்னோக்குகளைக் கைவிட்டு ஏகாதிபத்தியத்தினதும், முதலாளித்துவத்தினதும் அழுத்தங்களுக்கு அடிபணிந்தனர். இந்தப் பின்னடிப்பின் ஒரு பாகமாக 1952ல் அவர்கள் சமசமாஜ கட்சியுடன் இணைந்தனர். சமசமாஜக் கட்சியுடன் இணைந்துகொண்ட இத் தலைமை நான்காம் அகிலத்தின் மூலோபாயம், வேலைத் திட்டத்தை கைவிட்டு ஓடிய திரிபுவாதிகளுடன் இணைந்து கொள்வதாக அனைத்துலக ரீதியில் செயற்பட்டது;

ட்ரொட்ஸ்கிசத்தைக் கைவிட்டு முதலாளி வர்க்க அழுத்தங்களுக்கு இங்ஙனம் அடிப்பணிந்துபோகும் நிலையில் அடுத்து வந்த ஒரு தசாப்த காலத்தில் தொழிலாள வர்க்கத்தின் பலத்த சக்தியானது நகர்புற, தோட்டத்துறை தொழிலாளர்களை அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்த தொடுத்த போராட்டத்தினுல் ஏற்பட்டது. 1953ல் இந்தத் தொழிலாள வர்க்கம் ஐக்கியத்துடன் கிளர்ந்து எழுந்து புரட்சிகர முன்னேடி நிலைமையை இலங்கையில் ஏற்படுத்தியது. 1956ல் யூ.என்.பி–ஸ்ரீ.ல.சு.க. முதலாளிகள் 'தனிச் சிங்கள' தேசிய வெறியை முன்னேருபோதும் இல்லாத விதத்தில் முன்னெடுத்து வந்த வேளையில் சமசமாஜக் கட்சி 'சம அந்தஸ்தின்' அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை வழி நடாத்தியது.

''வெறுமனே தலைகளைக் கணக்கிடுவதன் மூலம் இப்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினையை சரியாக தீர்மானிக்க முடியாது என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுவது அவசியம். தேசத்தினுள்ளோ அல்லது தேசத்தினுள் இன உறவுகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு தலைகளைக் கணக்கெடுத்து எண்ணளவிலான பெரும்பான்மையை வெளிப்படுத்துவது எந்தவிதத்திலும் ஜனநாயக விதி முறையாகாது. அத்தகைய விடயங்களில் ஜனநாயகமானது. எண்ணளவிலான பெரும்பான்மையை இன சமத்துவத்தின் மூலம் பதிலீடு செய்வதே.''

நகர்புற, தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து இந்த கொள்கையின் அடிப்படையில் போராடியதால், அதனால் கிராமப்புற விவசாயிகளையும் அவ்வாறே வட – கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினரையும் ஈர்க்க முடிந்தது. சமசமாஜ தலைவர்கள் வேகமாக வலதுசாரிபக்கம் பயணம் செய்யத் தொடங்கிய போதும் 1963ல் கூட நகர்புற–தோட்டப்புற தொழிலாளர்கள் 21 கோரிக்கைகள் இயக்கத்தைச் சூழ அணி திரண்டனா.

## சிறிமா— சாஸ்திரி ஒப்பந்தம்

எனினும் சமசமாஜ தலைவர்கள் இனவாத அடிபணிவுகளின் உச்சிக்கு செல்வதன் அங்கமாக 1964ன் சிறிமா–சாஸ்திரி உடன்படிக்கையை அங்கீகரித்ததோடு, அதே ஆண்டிலேயே சி.ல.சு. கட்சி அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளையும் ஏற்றனர். அதைத் தொடர்ந்துவந்த தகாப்தத்தில் ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளி வர்க்கமும் இத் தலைமைகளைக் கொண்டு தொழிலாள வர்க்கம் கட்டி எழுப்பிய வர்க்க ஐக்கியம் உயர்மட்ட வர்க்க நனவு, இயக்க சக்தி ஆகியவற்றை தகர்த்தனர், 1964ல் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தை தீர்க்கமான முறையில் காட்டிக் கொடுத்ததால் நகர்ப்புற தொழிலாளர்களில் இருந்து தோட்டப்புற தொழிலாளர்களை பிளவு படுத்தும் இலங்கை தொழிலாளர்களில் இருந்தும் வட–கீழ் மாகாண தமிழ் தேசிய இனத்தினை பிளவுபடுத்தவும், தொழிலாள வர்க்கத்தில் இருந்து விவசாயிகளை பிளபுபடுத்தும் இனவாத பிளவு மிக்க கடைகெட்ட வேலைத்திட்டங்களை முன் வைப்பதில் சிங்கள பேரின முதலாளி வர்க்கம் வெற்றி கண்டது.

1964ல் சிறிமா பண்டார நாயக்கா அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலானோரின் தொழில்களுக்கு தாக்குதல் தொடுத்து அவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்த இந்திய முதலாளித்துவ அரசாங்கத்துடன் இணைந்தது; இது கடும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் தொழிலாளர்களின் தொழில்களை தாக்கவும், தொழிலாள வர்க்கத்தை பலவீனமாக்கவும் இலங்கையின் முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியின் சகல பிரச்சினைகளதும் அடிப்படை தமிழ் தோட்டத்தொழிலாளர்களே என இனவாத ரீதியில் குரல் எழுப்புவதன் மூலம் சிங்களம் பேசும் தொழிலாளர்களை தடம் புரளச் செய்து, இனவாதத்தை தூண்டிவிட வழி வகுத்தது.

சமசமாஜ தலைவர்கள் இந்த கடைகெட்ட தாக்குதலுக்கு அடிபணிந்து போகும்விதத்தில், இந்திய–இலங்கை அரசாங்கங்களுக்கும் தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை மூலம் குடியுரிமை பிரச்சினையை தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற திருத்தத்தினை கட்சி வேலைத்திட்டத்திற்கு கொணர்ந்தனர். இவர்களின் அனைத்துலக பப்லோவாதிகள் இந்த இனவாத திருத்தத்துக்கு இணங்கினர். சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கையும் அதைத் தொடர்ந்து சிறிமா–காந்தி உடன்படிக்கையும் 3,75000 தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்கவும் 600,000 தொழிலாளரை இந்தியாவுக்கு நாடு கடத்தவும் உடன்பட்டது. இதில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட 3 37000 தொழிலாளர்களில் குறைந்த பட்சம் நூற்றுக்கு 75%தினர் பிச்சைக்காரர்களாகி உள்ளனர்.

ஒரு காலப் பகுதியில் முதலாளித்துவச் சார்பு தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரசினுள் செயற்பட்டுவந்த தொண்டமான் சமசமாஜ தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்களினால் 1963 அளவில் சுமார் 5 இலட்சம் அங்கத்தினர்களை திரட்டிக் கொள்ள முடிந்தது. சமசமாஜக் கட்சியின் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம் 1963ல் 80,000 அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது; லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிலாள வர்க்க அடிப்படைக் கொள்கைகளின் பேரில் தோன்றிவந்த வேளையில் தொண்டமானுக்கு தோட்டப்புறத்தில் அங்கத்துவம் அதிகரித்துவந்தபோதிலும் தீர்க்கமான தலையீட்டினை ஏற்படுத்த முடியவில்லை.

சமசமாஜ தலைவர்களின் காட்டிக் கொடுப்புடன் அதுகாறும் சி.ல.சு. கட்சியுடனும், யூ.என்.பி.யுடனும் இழுபட்டு வந்த முதலாளித்துவ தலைமையான தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களின் 'இரட்சகர்' ஆகத் தம்மைக் காட்டிக் கொண்டார். அவர் சமசமாஜ தலைவர்களின் காட்டிக் கொடுப்பு 'சோசலிசம்' 'கம்யூனிசத்தின்' தோல்வியால் ஏற்பட்டதாக பிரச்சாரம் செய்து வந்தார்.

1972ல் காணிச் சீர்திருத்தம் எனப்படுவதன் பேரால் ஏகாதிபத்திய நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்த தோட்டங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொணரப்பட்டது. சுதந்திரக் கட்சி – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தொடுத்த தாக்குதல் பிற்போக்கு தொண்டமானின் கரங்களைப்பலப் படுத்தியது.

1977ல் யூ.என்.பி. தொண்டமானின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றியது; 1964ல் சமசமாஜ தலைவர்களின் தீர்க்கமான காட்டிக் கொடுப்பினால் தொழிலாள வர்க்கத்தை பலவீனப்படுத்தி, முதலாளித்துவத்துக்கு எதிரான மாற்று சக்தியாக தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதை சீர்குலைக்க செயல்பட்டதன் பின்னரே இந்நிலை உருவானது. ஒரு விதத்தில் யூ.என்.பி. அரசாங்கத்தின் ஆட்சியானது ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைக்கூலி முதலாளிகளாலும் ஏற்படுத்த முடிந்த அழிவுமிக்க மக்கள் படுகொலைகளாலேயே நின்று பிடித்தது.

உலக ஏகாதிபத்தியத்தின் ஆழமான நெருக்கடியின் மத்தியில் தாற்றம் எடுத்த இலங்கை முதலாளி வர்க்க ஆட்சிக்கு எதிராக தோட்டப் புறத்திலும், நகர்ப்புறத்திலும் தொழிலாள வர்க்கத்தின் புதிய தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இந்தத் தொழிலாள வர்க்க வெற்றிக்கு பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தினை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர வேலைத்திட்டமும், இயக்கமும் அவசியம். இந்த வேலைத்திட்டத்தையும் இயக்கத்தையும் பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்கும் பொருட்டு அனைத்துலக ரீதியில் பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராகவும் அதன் இலங்கை ஏஜன்டான சமசாமஜக் கட்சியின் திரிபுவாதத்துக்கு எதிராகவும் போராட்ட பதாகையை உயர்த்த வேண்டும். இப் பதாகையை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உயர்த்தியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்தியத்திற்கும்,ஸ்டாலினிசத்திற்கும் எதிராக உலகத் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசப்புரட்சிக்காக அணிதிரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடுகள்.

நாள்தோறும் கூர்மையடையும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளினால் வெடித்துக் கிளம்பும் வர்க்கப் போராட்டங்களுக்கு ஆயுதபாணியாகுவதற்காக ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்.

# தொழிலாளர் பாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள,தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா,தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் "தொழிலாளர் பாதை" மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.


தொடர்புகளுக்கு

**Tholilalar Pathai**
**POSTFACH 1609**
**7120 BIETIGHEIM-**
**BISSINGEN**









www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முக்கியமாக படிக்கவேண்டிய தமிழ் நூல்கள்!

**இலங்கை—இந்திய ஒப்பந்தமும்**
**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்** ரூ. 3.00
*(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை)*

**தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!**
**சோஷலிச வேலைத்திட்டத்திற்காக போராடு!** ரூ. 2.00
*(புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை)*

**தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடுழி வாழ்க!** ரூ. 10.00
*(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான*
*புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழுவின் அறிக்கை)*

**1948 — கொல்வின் ஆர். டி. சில்வா** ரூ. 1.50
*(தொழிலாளர் பாதை வெளியீடு)*

தொடர்பு கொள்க:
ஆனந்த வக்கும்புர
இல. 90, 1வது மாவிகாகந்த ஒழுங்கை;
கொழும்பு 10.

மருதானை இல. 90, 1வது மாவிகாகந்த ஒழுங்கையில் வசிக்கும், ஆனந்த வக்கும்புறவினால்,
மகரகம இல; 51, நாகஹவத்த வீதியில் உள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

© Arbeiterpresse Verlag, Postfach 100 105, D-4300 Essen 1